# கலா நிலயம்

A Literary Weekly

வியாழன்தோறும் வெளிவரும்.

வருஷ சந்தா
உள் நாடு ரூ. 7 8 0
புற நாடு ரூ. 9 0 0

காரியாலயம்:—
No. 11, வேளாளர் தெரு,
புரசைபாக்கம், சென்னை.


OFFICE OF THE RE... 3- JAN ... MADRA

Vol 2.] 1929 ஞு டிசம்பர் மீ 19உ [No. 50.

பொருளடக்கம்.


1. தலையங்கம் (Leader). 981
2. அப்பர். (நாடக வியல்) E.N. தணிகாசலமுதலியார் B.A., B. L. 982
3. நம்மாழ்வார் வைபவம் (ஆழ்வாரும் பகவத்கீதையும்) K. இராஜகோபாலாசாரியார் B.A. B.L. 985
4. தமிழ்ப் பாடம் (திருவரங்கக் கலம்பகம்) 987
5. எண்சாணுடம்பிற்கு எவ்வளவு நிலம் வேண்டும் (Tolstoy) V. K. இராமநாதன் B.A., B.L. 989
6. மானத சாத்திரம் (நரம்புகள்) T. P. மீனாட்சி சுந்தரம் M.A., B.L., 991
7. மலர்வனம் (காதன் மாதவி) "மதுகரம்" 993
8. கம்பராமாயணம் (பரசுராமப் படலம்) T. N. சேஷாசலம் B. A, B. L. 995
9. வில்லிபாரதம் (சூதுபோர்ச் சருக்கம்) T. S. நடராஜபிள்ளை, B.A., B. L 996
10. அட்டவணை 998
11. வர்த்தமானம் 1000


அடுத்த வருடத்திய சந்தாவிற்காக ஜனவரி முதலில் வி. பி. அனுப்புவோம். மற்று, நண்பர்கள் இம்மாதத்திற்குள்ளேயே தங்கள் 1930 வருடத்திய சந்தாவை மணியார்டரில் அனுப்புவாராயின் அவர்களுக்கு வி. பி. செலவு குறைவதுடன், எங்களுக்கும் மிகவும் சவுகரியமா யிருக்கும். "மானேஜர்"

## கலா நிலயம்

189085

இன்றுட னிரண்டாவதாண்டு நிறைகின்றது. தமிழ்ப் பாடத்தில் அஷ்டபிரபந்தம் முடிந்ததாகையால் அடுத்தஆண்டு வில்லிபாரதத்தில் கிருஷ்ணன் தூதுச் சருக்கத்தில் சில செய்யுள்களை இலக்கியப் பாடத்திற்கு எடுத்துக் கொள்வோம். இலக்கணத்தில் புணர்ச்சி விதிகள் இன்னும் பல சொல்லவேண்டி யிருக்கின்றன. அவை முடிந்தபின் யாப்பிலக்கணம் எடுத்துக்கொண்டு மூன்றாவதாண்டில் அதனைமுடிக்க இருக்கின்றோம். தமிழ்ப்பாடத்தில் கிருஷ்ணன் தூது முடிந்து நைடதம் ஆரம்பிக்கின்ற வரையில், ஸ்ரீமான். T. S. நடராஜபிள்ளை எழுதும் வில்லிபாரத விளக்கம் நின்றிருந்து, பிறகு சபாபருவத்தில் இப்பொழுது விட்ட இடத்திலிருந்து தொடரலாகும். ஸ்ரீமான். E.N. தணிகாசல முதலியார் எழுதிவரும் 'அப்பரும்' ஸ்ரீமான். K. இராஜகோபாலாசாரியார் எழுதிவரும் 'நம்மாழ்வார் வைபவமும்', ஸ்ரீமான். T. P. மீனாக்ஷி சுந்தரம் எழுதிவரும், 'மானத சாத்திரமும்' அடுத்த வருடம் தொடரலாகும். கம்பராமாயணத்தில் பால காண்டம் முடிந்ததால், இனி, ஸ்ரீமான். T. N. சேஷாசலம், 'அயோத்தியாகாண்டம்' எழுதலாவார். ஸ்ரீமான் T. S. நடராஜபிள்ளை, ஸர் வால்டர் ஸ்காட் எழுதிய லேடி ஆப் தி லேக் (Lady of the Lake) என்னும் நூலைத் தழுவி ஒரு நாவல் எழுதித் தருவார்.

இவ்வருடம் 'மாறன் பாப் பாவினம்' என்னும் நூலைப் பதிப்பித்தது போன்றே, அடுத்த ஆண்டு குறுந்தொகையை (இது முன்னரே அச்சேறி யிருப்பினும் புத்தகம் கிடைக்காமையால்) பதிப்பிக்க முயன்றுவருகின்றேம். தகுந்த பிரதிகள் கிடைக்காமல் அது இயலாமற்போயினும், ஒட்டக்கூத்தர் பாடிய தக்ஷயாக பரணியேனும் அல்லது அதுபோன்ற வேறேதேனுமொரு சிறந்த நூலைத்தக்கபடி இப்பத்திரிகையில் பதிப்பிக்கக்கருதியுளோம். அண்டபுராணத்திலும் சில படலங்கள் அடுத்தவாண்டு வருமென்று நினைக்கின்றேம்.

இவ்வாண்டு முதலில் யாம், கருதிய கருமங்கள் யாவுங் கைகூடியதற்கு அருட்பெருங் கடவுளைவழுத்துவதுடன், மனமுவந்து எமக்குக் கட்டுரைகள் எழுதித்தந்த உண்மை நண்பர் அனைவர்க்கும் மிக்க கடப்பாடுடைய வராகின்றேம். ஈத்துவக்கும் இன்பம் அறிந்த அப் பெருந்தகையாளர்களது கட்டுரைகளின் அருமையை வியந்து எமது வாசகர்களிற் பலர் வரைவதை அன்னவர்க் குரைப்பதல்லால் வேறோர் கைம்மாறு ஆற்றும்வகை கண்டிலம்.

இக்கலாநிலயம் நட்டப்பேறு பெரிதும் உடைத்து. இப்பத்திரிகை நன்குபரவி வளருமாறு தமது நண்பர்களை எமக்கு அறிமுகம் செய்வித்துச் சந்தாதாராகச் சேர்த்துவரும் பெருந்தகையாளர் எமது வாசகர்களில் பலர் இருப்பதும். இறைவனருளே. அன்னார் செய்துவருகின்ற உதவியால், பத்திரிகைகளின் இளமைக்குரிய இடையூறுகள் நேராவண்ணம் கலாநிலயம் நடைபெறலாகின்ற தென்பதை உரைப்பதோடு எமது வந்தனத்தைச் செலுத்துகின்றோம்.

அடுத்தவாரம் எமது காரியாலயத்திற்கு ஓய்வுநாள் ஆதலின், 1930-ஞு, ஜனவரி மீ, 2உ, மூன்றாவது வால்யூமின் முதல் இதழ் வெளிவரும்.

# அப்பர்

## 7. அப்பரும் நாடக வியலும்

(966 வது பக்கத் தொடர்ச்சி)

### (ii) தலைக்கோலின் ஏற்றம்

தலைக்கோல் பெறுவது, ஆடல் பாடல் அழகு என்னும் மூன்றின் உயர்வுசிறப்புத் தொகுதியென முன்னரே கண்டோம். இத்தகைய நன்மங்கையர் நகருக்கே ஒரு அணிகல னுவார்:—

கலையிஞெலி மங்கையர்கள் பாடலொலி
யாடல்கவி னெய்தியழகார்
மலையினிகர் மாடமுயர் நீள்கொடிகள்
வீசுமலி மாகறலுளான்
இலையின்மலி வேலுனைய சூலம்வல
னேந்தியெரி புன்சடையினுள்
அலைகொள்புன லேந்துபெரு மானடிமை
யேத்தவினை யகலுமிகவே.

சம்பந்தர்

தலைக்கோல் பெற்றவளே ஆட்டத்தில் தலைவியாகும். துணையாய ஏனையோர் தொழிற்கும் இவள் தொழிற்கும் ஏற்றபடி பரிசுகொடுக்க இவளே பெற்றுத், தோரியமடந்தையர் முதலானோருக்கு அப்பரிசிலில் சில பாகங்கள் கொடுப்பாள். இக்காலத்தில் நாடக முதலாளிகள் வருவாயில் பெரும்பாகம் தாம் கைக்கொண்டு நடிப்பவர்களுக்குக் கூலிகொடுப்பதுபோல் அக்காலத்தில் தலைக்கோலரிவை பரிசின் பெரும்பாகத்தைக் கவர்வதில்லை. அங்ஙனம் அவாக்கொண்டால் பல புலவர்களும், தற்பொழுது வயதின் முதிர்ந்திருப்பினும் தன்னைப்போல் முன்னொருகாலத்தில் தலைக்கோல் பெற்ற மாதர்களும், இவளைச்சூழ்ந்து உதவிக்கு வாரார். வாரம் பாடலால் வருவாய் அதிகம் உளதென்றெண்ணியோ அதை உருவகத்தில் சம்பந்தரும்,

"மூரல் வெண்மதி சூடு முடியுடை
வீரன் மேவிய வேற்காடு
வார மாய்வழி பாடுநி னைந்தவர்
சேர்வர் செய்கழ றிண்ணமே!"

என்றார்போலும். இப்பதிகத்தின் 6-ம் பாசுரத்தில் "நூலினாற் பணிந்தேத்திட வல்லவர், மாலினார் வினை மாயுமே" என்றும், "பாட்டினாற் பணிந்தேத்திட வல்லவர் ஓட்டினார் வினை யொல்லையே!" என்றும் கூறியது காண்க. இக்கருத்தையே சுந்திரமூர்த்திநாயனாரும்,

"வாரமாகித் திருவடிக்குப்
பணிசெய்தொண்டர் பெறுவதென்னே?
ஆரம்பாம்பு வாழ்வதாரு
ரொற்றியூரே யும்மதன்று
தாரமாகக் கங்கையாளைச்
சடையுள்வைத்த வடிகேளுந்தம்
ஊருங்கா டுடையுந்தோலே
யோணகாந்தன் றளியுளீரே!" என்றும்

"கூடிக்கூடித் தொண்டர்தங்கள்
கொண்டபாணி குறைபடாமே
ஆடிப்பாடி யழுதுநெக்கங்
கன்புடையவர்க் கின்பமோரீர்!
தேடித்தேடித் திரிந்தெய்த்தாலுஞ்
சித்தமென்பால் வைக்கமாட்டீர்
ஓடிப்போகீர் பற்றுந்தாரீ
ரோணகாந்தன் றளியுளீரே" என்றும்

"தேவியார் கோல்தட்டி யாளார்,
உங்களுக் காட்செய்ய மாட்டோம்"

என்றும், வஞ்சகப்புகழ்ச்சி நடையிற் பாடினார்.

தலைக்கோலரிவையர் அரங்கில்ஆடல்மாத்திரமன்று, பாடலிலும் சிறந்து முதன்மையாய்க் காணப்படுவர்.

"கொட்டாட்டொடு பாட்டொலி" யென வியந்து கூறப்படுவதும் இவர் பாட்டே. இக்காலத்திலும் சேர தேசத்தில் ஆடல், பாடல், அழகு சிறந்து விளங்குவதுபோல், அக்காலத்தில் கொங்குநாட்டுத் தலங்களிலு மிருந்தமை தேவாரத்திற் காணலாகும். "வரை மானனையார், மயிற் சாயனல்லர், வடிவேற்க ணல்லார்," பலர்வந் திறைஞ்சும் வெஞ்சமாக்கூடலில், சுந்தரர் பதிகம் காண்க:—

காடும்மலையுந் நாடும்மிடறிக்
கதிர்மாமணி சந்தனமும்மகிலும்
சேடன்உறையு மிடந்தான்விரும்பித்
திளைத்தெற்றுசிற்று றதன்கீழ்க்கரைமேல்
பாடன்முழவுங் குழலும்மியம்பப்
பணைத்தோளியர்பாட லோடாடலறு
வேடர்விரும்பும் வெஞ்சமாக்கூடல்
விகிர்தாவடியேனை யும்வேண்டுதியே!"

பண்ணேர்மொழியாளை யோர்பங்குடையாய்!
படுகாட்டகத்தென்று மோர்பற்றொழியாய்
தண்ணார்முகிலுந் நலசாமாரையும்
அலைத்தெற்றுசிற்று றதன்கீழ்க்கரைமேல்
மண்ணார்முழவுங் குழலுமியம்ப
மடவார்நடமா டுமணியரங்கில்
விண்ணார்மதிதோய் வெஞ்சமாக்கூடல்
விகிர்தாவடியேனையும்வேண்டுதியே!

தலைக்கோலரிவை தன் துணைவர்களைப் பாடச்செய்து தான் நட்டம் ஆடுவதுபோல், சிவபெருமான் பூதகணங்களைப் பாடச்செய்து, தான் நடனமாடுவது மூவர் தேவாரத்திலும் காணலாகும்:—

காதலாலே கருதுதொண்டர் காரணத்தி ராகிநின்றே
பூதம்பாடப் புரிந்துநட்டம் புவனியேத்த வாடவல்லீர்
நீதியாக வேழிலோசை நித்தராகிச் சித்தர்சூழ
வேதமோதித் திரிவதென்னே வேலைசூழ்வெண்
[காடனீரே!

சுந்தரர்.

காடிட மாக நின்று கனலெரி கையி லேந்திப்
பாடிய பூதஞ்சூழப் பண்ணுடன் பலவுஞ் சொல்லி
ஆடிய கழலர் சீரா ரந்தணெய்த் தான மென்றும்
கூடிய குழக னைரைக் கூடுமா றறிகி லேனே

அப்பர்.

பேயாயின பாடப்பெரு நடமாடியபெருமான்
வேயாயின தோளிக்கொரு பாகம்மிகவுடையான்
தாயாகிய வுலகங்களை நிலைபேறுசெய்தலைவன்
நேயாடிய பெருமானிட நெய்த்தானமென்னீரே

சம்பந்தர்.

தலைக்கோ லரிவையின் அபிநயங்கள் "நால்வகைக் களத்திலும் ஏழ்வகை நிலத்திலும்" எவ்வாறு நடத் தப்படுமென்பது, "அப்பரும் அறுபத்திநான்கு கலைகளும்" என்று இனிவர இருக்கும் அத்தியாயத்தில் விரித்துக்காட்டப்படும். இதுநிற்க. தலைக்கோலரிவை தான்பாடி ஓய்ந்த நேரத்தை, நட்டம் இடைவிட்ட தெனத் தோன்றுவண்ணம், இவ் வபிநயக் கலையி பயன்படுத்துவாள். அபிநயமென்பது விலக்குறுப்பு பதினான்கி லொன்று. பல்வகைக் கூத்தும் விலக்கினி புணர்த்தும் திறமை பெற்றவளே, தலைக்கோலேற்ற காட்டக்கூடியவளாகும். இவள் இவ்வாறு வல்லமை



பெற்றிருப்பினும், மற்றவர் ஆட்டிவைக்கத் தான் ஆடுவதுபோல் நடிப்பது இவள் ஏற்றமாகும். இதை யெண்ணியே அப்பர் "நடமாடு கூத்தனை," "ஆட்டுவித்தால் ஒருவர் ஆடாதாரே" என்றார். மற்று இதை உருவகப்படுத்தில், உடலென்னும் அரங்கிலுள்ள அந்தக்கரண சேஷ்டைகளை அப்பர் வெளியிடுகின்றார் என்னல் வேண்டும்:—

கூட்டமா யைவர்வந்து கொடுந்தொழிற் குணத்தராகி
ஆட்டுவோர்க் காற்றகில்லே னுடைர வசைத்த கோவே!
காட்டிடை யரங்கமாக வாடிய கடவுளேயோ!
சேட்டரும் பழனவேலித் திருக்கொண்டீச் சரத்து
[ளானே!

திருக்கொண்டீச்சரம் - திருநேரிசை-4.

தலைக்கோலரிவை பொதுவியலில் ஆடுவதுபோல், திருச்சிற்றம்பலக் கூத்தன்,

பட்டுடுத்துத் தோல்போர்த்துப் பாம்பொன் றார்த்துப்
பகவனார் பாரிடங்கள் சூழ நட்டஞ்
சிட்டராய்த் தீயேந்திச் செல்வார் தம்மைத்
தில்லைச்சிற் றம்பலத்தே கண்டோ மிந்நாள்
விட்டிலங்கு சூலமே வெண்ணூ லுண்டே
யோதுவதும் வேதமே வெண்ணூ லுண்டே
கட்டங்கங் கையதே சென்று காணீர்
கறைசேர் மிடற்றெங் கபாலி யார்க்கே.

புக்க திருத்தாண்டகம் 11.

எனவும், இதைப் பாடுவதினும் சிறந்ததொழில்வேறில்லை யெனவும் அப்பர் கூறுவர்.

கூட வேடத்த ராகிக் குழுவிலென்?
வாடி யூனை வருத்தித் திரியிலென்?
ஆடல் வேடத்த னம்பலக் கூத்தனைப்
பாட லாளர்க்கல் லாற்பய னில்லையே!

பாவநாசத் திருக்குறுந்தொகை 7.

திருஞானசம்பந்தரும் தலைக்கோல்மகளிர் ஆடலே நகரத்திற்கு ஒருவகைச் செல்வமென்பர். ஏனெனில், இம்மகளிர் எல்லா இசைக் கருவிகளிலும் * தாம் வல்லவராய், நாதமுடிவிற் காணக்கூடிய போதத்தையும் எட்டுவராதலால், பொதுமகள்குலத்திற் பிறந்தும் இவர் ஏற்றம் † மிகச் சிறந்ததேயாம்:—

ஓதமலி கின்றதெனி லங்கையரை
யன்மலி புயங்க ணெரியப்
பாதமலி கின்றவிர லொன்றினி
லடர்த்த பரமன் றனதிடம்
போதமலி கின்றமட வார்கணட
மாடலொடு பொங்கு முரவம்
சேதமலி கின்றகரம் வென்றிதொழி
லாளர்புரி தேவூ ரதுவே!

சம்பந்தர்.

இக்கருத்தையே மற்றொரு தலத்தில் அப்பரும்,

செந்துவர் வாய்க்கலுங் கண்ணிணை
வெண்ணகைத் தேன்மொழியார்
வந்து வலஞ்செய்து மாநட
மாட மலிந்தசெல்வக்
கந்த மலிபொழில் சூழ்கடல்
நாகைக்கா ரோண மென்றும்
சிந்தை செய்வாரைப் பிரியா
திருக்குந் திருமங் கையே!" என்றார்.

திருநாகைக்காரோணம் - திருவிருத்தம் 5.

### (iii) தலைக்கோலரிவையின் (அரங்கு) நிலை

தலைக்கோலரிவைக்கும் ஏனையோர்க்கும் அரங்கில் நிற்கும் முறைமையாவது

"ஆடிட முக்கோ லாட்டுவார்க் கொருகோல்
பாடுநர்க் கொருகோல் அந்தர மொருகோல்
குயிலுவர் நிலையிட மொருகோல்"

எனப் பிரித்தெடுக்கப்படும். இவ்வழக்கம் பொருந்த நாடகக்கணிகை அரங்கில் வலக்கால்முன்னேவைத்து ஏறிப் பொருமுக வெழினிக்கு நிலையிடமான வலப் பக்கத்துத் தூணிடத்தே சேர்வள். இடத்தூணிலையாகிய ஒருமுக வெழினியிடத்தில் பழையநெறி யியற்கையினையுடைய தோரியமடைந்தையர் முதலானோர் சேர்வர். இதை உருவகப் படுத்தியே மணிவாசகப் பெருமான்,

நாடகத்தி லுன்னடியார் போனடித்து நானடுவே
வீடகத்தே புகுந்திடுவான் மிகப்பெரிதும் விரைகின்
[றேன்
ஆடகச்சீர் மணிக்குன்றே யிடையறா வன்புனக்கென்
னூடகத்தே நின்றுருகத் தந்தருளெம் முடையானே!

என்றார் போலும். இதுவே அடியார்க்குநல்லார் காட்டும் ஒரு விளங்கா மேற்கோளில்,

கோலமும் கோப்பு நூலொடு புணர்ந்த
விசையு நடமு மிசையத் திருத்திக்
கரந்துவர லெழினியொடு புகுந்தவன் பாடலிற்
பொருமுக வெழினியிற் புறந்திகழ் தோற்றம்
யாவரும் விழையும் பாவனை, எனப்பட்டது.

தலைக்கோலரிவை அரங்கின் நடுவீடகத்துப்புகுந்து அரசன்முன் வைத்து வணங்கப்பட்ட தலைக்கோலைத் தன் * தலையிற் கட்டிக்கொண்டு நாடகம் ஆடுவாள். அகத்தியன் உருப்பசிக்கு இட்ட சாபத்தைக் கூறுமிடத்து:—

சுந்தர மணிமுடி யிந்திரன் மகனை
"மாறு விறலோய்! வேணு வாகென
விட்ட சாபம் பட்ட சயந்தன்
"சாப விடையருள் தவத்தோய்! நீ" யென
மேவினன் பணிந்து மேதக வுரைப்ப,
"வோடிய சலபத் துருப்பசி தலைக்கட்டுங்
காலைக் கழையு நீயே யாகி
மலையமால் வரையின் வந்துகண் ணுற்றுத்
தலையரங் கேறிச் சார்தி!" யென்றவன்
கலக நாரதன் கைக்கொள் வீணை
யலகி லம்பண மாகெனச் சபித்துத்
தந்தரி யுவப்பத் தந்திரி நாரிற்
பண்ணிய வீணை மண்மிசைப் பாடி
மீண்டு வருகெனப் பூண்ட சாபம்
இட்டவக் குறுமுனி யாங்கே
விட்டன னென்ப வேந்தவை யகத்தென்—என்றார்.

இவ்வாறு தலைக்கோலரிவை ‡ தலையரங் கேறியபின்னர், நன்மை யுண்டாக்கவும் தீமையாவும் நீங்கவும் தெய்வப்பாடலான முன்விவரிக்கப்பட்ட வாரப்பா

* கோலத்தி னிசையின் யாணர் கூத்தினி னவிர யத்திற்
சீலத்திற் கலவிச் செய்கைத் திறத்தினிற் பிறவாற்றானு
ஞாலத்துமைந்தர் தம்மைமருட்டிநற் பொருள்கள் வவ்விக்
காலுற்ற சாற்று வேழக் கோதுபோற் கழிய நீப்பார்
காஞ்சிபுராணம்.

† மேலோடி விசும்பணவி வியனிலத்தை
மிகவகழ்ந்து மிக்குநாடும்
மாலோடு நான்முகனு மறியாத
வகைநின்றான் மன்னுங்கோயில்
கோலோடக் கோல்வளையார் கூத்தாடக்
குவிமுலையார் முகத்தினின்று
சேலோடச் சிலையாடச் சேயிழையார்
நடமாடும் திருவையாறே.

சம்பந்தர்.

* இதனாலேயே இதற்குத் தலைக்கோல் என்னும் பெயர் முதலில் வந்ததென அநுமானிக்கலாம்.

‡ அரிவை யென்று மங்கைப்பருவத் துவக்கத்திலிருப்பாளைக் கூறமிது, அவள் கல்வி இசை நடம் முதலிய ஏற்றங்களை நோக்கியாம். வயதிற் சிறியவளாயினும், கல்வி முதலியனவற்றில் பெரியவ ளாதலால், இவளுக்குத் துணை வருபவரைத் தோரியமடந்தையரென்று மொழிந்து, இவளைத் தலைக்கோலரிவை யென்றழைத்தல் நாடகநூன் மரபு.

OFFICE OF THE RE
No.
3- JAN 19

டல் இரண்டு வரிசையாய்த் தோரியமடந்தையார் பாடுவர். இவர் பாடல்களும், யாழ் குழல் முதலிய கருவிகளும் முடிந்த பின்னர், மிடற்றுப்பாடல் பாடப்படும். பின்னர் இடக்கையென்னும் கருவியோடே மற்ற இசைக்கருவிகளனைத்தும், பருந்தும் நிழலும் போல ஒன்றாய்க் கலக்கத் தலைக்கோலரிவை பஞ்சதாளப் பிரபந்தமாகக் கூட்டப்பட்ட தேசி யொத்தை ஒரு தாளத்திற்கு இரண்டு பற்றாகப் பத்தும், தீர்வு ஒன்றுமாகப் பதினொரு பற்றிலே ஒரு தேசிக்கூத்தை ஆடிக் காட்டுவாள். இப்படிச் செய்தல், நாடக நூல்களி லமைத்த முறைப்படி நிகழும். மனம்போன வாறோ, அல்லது பார்ப்பவர் களித்துநகைக்குமாறோ, நாடகமுறை வழுவ ஆடலாகாது. பிறகு அந்தரக் கொட்டென்னும் ஒத்து ஆடுவாள். இதன் பின்னரே உருவுகாட்டுகை வழக்கு. இதன் பின்னர்ப் பண்களில் மிகவும் கடினமானதும், சுவல்பத்தில் குற்றம் நேரக் கூடியதுமாகிய பாலைப்பண் அளவுகெடாதபடி ஆளாத்தியிலே வைத்துப் பாடுவாள். இசையில் இது மிகவும் கடினமான தொழிலாகும்; ஏனெனில் மங்கலப் பண்ணான இது நரப்படைவு முடைத்தாயிருக்கிறதால், இதன் அளவு கெடாதபடி பாடல் மிகவும் சாக்கிரதையுடன் செய்யவேண்டிய காரியமாகும்.

இப்பண்ணின் இசையிலக்கண முதலியன நாம் தற்காலத்தில் செவ்வனே காணக்கூடிய சாதனங்களில்லையாயினும், அப்பர் காலத்தில் இது மிகவும் அருமையுடன் கொண்டாடப்பட்டது.

காலையி லுண்பவருஞ் சமண்கையருங் கட்டுரை விட்
டால விட நுகர்ந்தா னவன்றன்னடி யேபரவி [டன்
மாலையில் வண்டினங்கள்மதுவுண் டிசைமுரலவாய்த்த
பாலையாழ்ப் பாட்டுகந்தா னுறைகோயில் பாதாளே.

சம்பந்தர்

பாலை யாழ்மொழி யாளவ டாழ்சடை
மேல ளாவது கண்டனள் விண்ணுறச்
சேரலை யார்தரு தோணி புரவர்க்குச்
சால நல்லளா கின்றனள் தையலே.

பண்ணி னேர்மொழி யாள்பலி யிட்டவிப்
பெண்ணை மால்கொடு பெய்வளை கொள்வது
சுண்ண மாடிய தோணி புரத்துறை
அண்ண லாருக்குச் சால வழகிதே!

அப்பர் - திருத்தோணிபுரத் திருக்குறுந்தொகை 4, 5

இத்தகைய பாலைப்பண் பாடியதும், மங்கலச் சொல்லை யுடைத்தாய், உக்கிரம் துருவை ஆபோகம் பிரகலை, என்னும் நாலுறுப்பும் குறைபடாது, உருவுக்குச் சொற்படுத்தியும் இசைப்படுத்தியும் பாட்டும் கொட்டும் கூத்தும் தலைக்கோல ரிவை நிகழ்த்துவள். அச்சமயத்தில் நிற்கும் நிலையே ஐதுமண்டல நிலையென்பர். ஐது என்றால் அழகு என்று பொருள். முன்னரே, அரங்கின் முன்பாகம் மண்டலமாகச் செய்யப்படுமென்று கூறினேம். அதாவது அரைவட்டம் (Semi-circular Platform) பொருந்திய பாகம். இதைச் சுந்தரர் தேவாரத்திற் குறிப்பிட்டமை காண்க:—

நாலுடை மாடெனவே நன்மை தரும்பரனை
நற்பத மென்றுணர்வார் சொற்பத மார்சிவனைத்
தேனிடை யின்னமுதை மற்றத னிற்றெளிவைத்
தேவர்க ணாயகனைப் பூவுயர் சென்னியனை
வானிடை மாமதியை மாசறு சோதியனை
மாருத மும்மனலும் மண்டல மும்மாய
கானிடை மாநடனென்றெய்துவ தென்றுகொலோ
கார்வயல் சூழ்கானப் பேருறை காளையையே.

திருக்கானப்பேர்-பண்-புறநீர்மை .3

மேற்சொல்லியவாறு தலைக்கோலரிவை ஐது மண்டலநிலையில் ஆடுவது, தேசி மார்க்க மென்னும் இருவகைக் கூத்தில் தேசிக்கூத்தின் இயக்கமாகும். தலைவரங்கில் இது ஆடிக்காட்டிய பின்னர் மார்க்கம் ஆடிக் காட்டுவாள். மார்க்கத்திற்கும் தேசிக்கும் உள்ள பேதம் அவற்றின் ஒத்தின் பேதமன்றி, வேறுபேதம் நூல்களில் காணப்படவில்லை. மார்க்கத்தில் இரட்டிக் கிரட்டியாக ஒத்து ஆடுதல் என்பர். வடுகு என்னும் மார்க்கமும் வைகாசநிலையில் ஆடி முடிக்கப்படுமென்பர். இவ்வாறு இருவகைக் கூத்தும் தலைக்கோலரிவை, தாண்டவம் நிருத்தம் நாட்டிய மென்னும் மூன்று கூறுபாட்டினும் நாட்டியமென்பது புறநடத்தை யாதலால், அதை நூல்களிற் சொன்ன முறைமைவழுவாமல் அவிநயித்துப்பாவகம்தோன்றுமாறு முன்னரேவிரித்துரைத்த விலக்குறுப்புப் பதினாலின் நெறி வழுவாமல் ஆடிக் காட்டுவாள். இங்ஙனம் யாதும் குற்றமின்றி ஆடியபின்னரே பரிசு கொடுக்கப்படும். இப்பரிசே இம்மாதின் பிற்கால அந்தஸ்தை நிலைநிறுத்துவதாம். ஆயிரத்தெட்டுப் பொற்காசு அரசனாற் கொடுக்கப்பெறின், இவள் தலைக்கோல் தலைமை பெறும். இவ்வழக்கம் சோழநாட்டின் மாத்திரமன்று, ஏனைய தமிழ்மன்னர் நாடுகளிலு முண்டென்பதே தேவாரத்தாலும் சங்க நூல்களாலும் அநுமானிக்கத் தக்கதாகும்.

## VII. தேவாரம் நாடகவியல் பெறுவானேன்?

தேவாரத்தில் அகப்பொருட்டுறைகள் எவ்வாறு பாடப்பட்டனவோ, அவ்வாறே நாடகவியலும் காட்டப்பட்டது. கூத்தாடல் ஆண்டானுக்கும் இன்றியமையாதது, அடிமைக்கும் இன்றியமையாதது. இவற்றை மணிவாசகப்பெருமான் திருவாக்கால் காண்க:-

ஆண்டான் கூத்து

தேன்புக்க தண்பணைசூழ் தில்லைச்சிற் றம்பலவன்
றான்புக்கு நட்டம் பயிலுமது வென்னேடீ?
தான்புக்கு நட்டம் பயின்றிலனேற் றரணியெல்லாம்
ஊன்புக்க வேற்காளிக் கூட்டங்காண் சாழலோ!

திருச்சாழல் - 14.

அடிமைக் கூத்து

பாட வேண்டுநான் போற்றி நின்னையே
பாடிப் பாடிநைந் துருகி நெக்குநெக்
* காட வேண்டுநான் போற்றி யம்பலத்
தாடு நின்கழற் போது நாயினேன்
கூட வேண்டுநான் போற்றி யிப்புழுக்
கூடு நீக்கெனைப் போற்றி பொய்யெலாம்
வீட வேண்டுநான் போற்று வீடுதந்
தருளு போற்றிநின் மெய்யர் மெய்யனே!

திருச்சதகம் 100.

இவ்வாறே அப்பரும்

காலதிர் கழல்க ளார்ப்பக் கனலெரி கையில் வீசி
ஞாலமுங் குழிய நின்று நட்டமா தாடு கின்ற
மேலவர் முகடு தோய விரிசடை திசைகள் பாய
மாலொரு பாக மாக மகிழ்ந்தநெய்த் தான னாரே.

திருநெய்த்தானம் - திருநேரிசை 7.

மிறைபடுமிவ் வுடல்வாழ்வை மெய்யென் றெண்ணி
வினையிலே கிடந்தழுந்தி வியவே னெஞ்சே
குறைவுடையார் மனத்துளான் குமரன் றாதை
கூத்தாடுங் குணமுடையான் கொலைவேற் கையான்
அறைகழலுந் திருவடிமேற் சிலம்பு மார்ப்ப
வவனிதலம் பெயரவரு நட்ட நின்ற
நிறைவுடையா னிடமாநெய்த் தான மென்று
நினையுமா நினைந்தக்கா லுய்ய லாமே.

திருநெய்த்தானம் - திருத்தாண்டகம் 6.

என்றும் பாடினார் ஆதலால் தமிழ்நாட்டில் பண்டைக் காலத்தில் நாடகவியல், இக்காலம்போல் விநோதக்

* இதையே மற்றோரிடத்திலும் "ஊனாநாடகம் ஆட்டுவித்தவா... ஞான நாடகம் ஆட்டுவித்தவா!" ... என்றனர்.



கூத்துக்கென்று ஏற்பட்டதன்று. சாந்திக் கூத்தே இதன் முக்கிய நோக்காம். அதாவது ஒரு நாடகம் ஆடினால் அதன் பயனாய் என்ன நன்மைகள் உண்டாகக்கூடும் என்று முன்னரே எண்ணியே நம்முன்னோர் ஆட்டுவிப்பார்.

சூடினார் கங்கை யாளைச் சூடிய துழனி கேட்டங்
கூடினா ணங்கை யாளு மூடலை யொழிக்க வேண்டிப்
பாடினார் சாம வேதம் பாடிய பாணி யாலே
ஆடினார் கெடில வேலி யதிகைவீ ரட்ட னாரே.

திருவதிகைவீரட்டானம் - திருநேரிசை 2.

மணிவாசகப் பெருமான் ஆத்மசுத்தி கூறுங்காலை, முதற் பாசுரத்தில்,

ஆடு கின்றிலை கூத்துடை யான்கழற்
கன்பிலை யென்புருகிப்
பாடு கின்றிலை பதைப்பதுஞ் செய்கிலை
பணிகிலை பாதமலர்
சூடு கின்றிலை சூட்டுகின் றதுமிலை
துணையிலி பிணநெஞ்சே!
தேடு கின்றிலை தெருவுதோ றலறிலை
செய்வதொன் றறியேனே"

என்றார். கூத்து (சாந்திக் கூத்தாடல்) உலகப்பற்றை யறுப்பதற்கு ஒரு கருவியென் றெண்ணப்பட்டது. ஞானிகள் செய்கையும் ஆடுதலும்பாடுதலுமன்றி நாம் காணக்கூடிய புறச்செய்கை யாதொன்று மில்லை.

பூதங்க டோறுநின் றாயெனி னல்லால்
போக்கிலன் வரவில னெனநினைப் புலவோர்
கீதங்கள் பாடுத லாடுத லல்லால்
கேட்டறி யோமுனைக் கண்டறி வாரைச்
சீதங்கொள் வயிற்றிருப் பெருந்துறை மன்னா
சிந்தனைக் கும்மரி யாயெங்கள் முன்வந்
தேதங்க ளறுத்தெம்மை யாண்டருள் புரியு
மெம்பெரு மான்பள்ளி யெழுந்தரு ளாயே.

சிரிப்பார் களிப்பார் தேனிப்பார்
திரண்டு திரண்டுன் றிருவார்த்தை
விரிப்பார் கேட்பார் மெச்சுவார்
வெவ்வே றிருந்துன் றிருநாமந்
தரிப்பார் பொன்னம் பலத்தாடுந்
தலைவா வென்பா ரவர்முன்னே
நரிப்பாய் நாயே னிருப்பேனோ
நம்பி யினித்தா னல்காயே.

அப்பர் நாடகவியல் முற்றிற்று.

# நம்மாழ்வார் வைபவம்.

## ஆழ்வாரும் பகவத்கீதையும்

977வது பக்கத் தொடர்ச்சி.

இப்பகவத் கீதையை ஆழ்வார் "பரமன் கிருஷ்ண பகவான்" "பணித்த" அருளால் கட்டளையிட்ட "விதி" என்பர். இக்காலத்தில் உலகமெங்கும் இது பரவி, முதல் கிரந்தமில்லாவிடினும் அதற்கு ஒருவாறு செய்துள்ள மொழி பெயர்ப்பைத் தக்கோர்கள் எங்கும் வாசிக்கிறார்கள். இத்தேசத்தில் முன்காலத்தில், இக் கிரந்தத்தை வேத ரிக்குகள் மந்திரங்கள் இவைகளைக் கிரகிக்கிறதுபோல், ஆசானிடத்திலிருந்து உபதேசம் பெறு முறையில்பணிந்து தெரிந்துகொள்வார்களே யன்றித் தான்தோன்றியாய்ப் படித்துத் தெரிந்துகொள்ள யத்தனித்திலர். மத ஆசாரியர்களே யாவையும் நன்கு தேர்ந்து, முன்பகுதிக்கு உரை கூறும்போது பின்னர் உள்ள பகுதிகளுக்குக் கொஞ்சம்கூட இடர்ப்பாடு வாராமல் கருதியும், பின்னர்ப் பகுதிக்கு உரையிடுகையில் பின்பார்வையாய் "ஸிம்மாவலோகனம்" என்று ஆரியத்தில் சொல்வதுபோல், முதுகுப்புறம் நோக்கிப் பின்கிடப்பதெல்லாம் நன்றாக ரக்ஷிக்கப் பட்டதாவென்று கவனிப்பார்கள். ஆகையால் ஒவ்வொரு மதக்காரர் உரையும், இயன்றவரையில் அவர்கள் கொள்கைகளையும் சித்தாந்தத்தையும் போற்றித் தழுவி அவர் அவர் சீடர்க்குச் தேர்ச்சியும் துணிவும் ஊட்டும். ஆழ்வார்காலத்தில் ஒன்றானவொரு வழியாய்க் குருமுகமாய் வந்த உரைகளன்றி வேறே குதிர்ஷ்டிகள்செய்யும் இடர்ப்பாடு இல்லாமையால், அம்மஹாநுபாவனுக்கு இந்நூலுக்கு அர்த்தம், உள்ளது உள்ளபடியே கிடைத்திருக்கு மென்பதற்கு ஐயமில்லை. இவர் கர்மயோகத்தின் கவடுகளை நன்றாய் அறிந்தவர். ஞானயோகத்தையும், இவ்விரண்டு துவாரங்கள் வழியாய்ப் பக்தியோகம் சாதிக்கும் நெறியையும், நன்கு அறிந்தவர்.

" இடகிலேன் ஒன்றட்டகில்லேன்
ஐம்புலன் வெல்லகில்லேன்
கடவனாகிக் காலந்தோறும்
பூப்பறித் தேத்தகில்லேன்
மடவன்னெஞ்சம் காதல்கூர
வல்வினையேன் அயர்ப்பாய்
தடவுகின்றேன் எங்குக் காண்பன்
சக்கரத் தண்ணலையே"

அதாவது, ஒரு மிடாத் தண்ணீர், குடிப்பவருக்கு வார்த்ததில்லை. ஒரு குத்துச்சோறு பசிக்கிறவர்களுக்கு இட்டதில்லை. அதாவது "தானம் கொடுத்தல்" என்கிற கர்மயோகத்தின் ஒரு பகுதியைக்கூட அநுஷ்டிக்கவில்லை. ஐம்புலன்களை அடக்குவதான ஞானயோகத்தை இயற்றி இல்லேன். தூபம் தீபம் விளக்குகளைக் கொண்டு பகவானை உசிதமான காலங்களில் ஆராதனம் செய்து அவனையே எப்போதும் சிந்தையில் வைப்பதானபக்தியோகத்தைக் கடமைபூண்டு அவலம்பித்தில்லேன். இங்ஙனே யுள்ளவர் இப்படி ஏற்பட்ட துறைகளிலிறங்காமல் அவனைக் காண்கைக்கு ஹேதுவில்லாமல் அவன் திறத்தில் என்னைப்போல் ஆசையால் வீழ்ந்துபடுவதில் காரியமில்லை, என்று அலறுகிறார். 3-2-8-ல் இவர் "மேவு துன்ப வினைகளை விடுத்துமிலேன். ஓவுதலின்றி உன்கழல் வணங்கிற்றிலேன். பாவு தொல் சீர்கண்ணா என் பரஞ்சுடரே கூவுகின்றேன் காண்பான் எங்கெய்தக் கூவுவனே" என்று இதற்கு முன்னும் அவனுடைய உத்கிருஷ்டமான குணங்களையும் அவன் திவ்விய ஸௌந்தரியத்தையும் பற்றாசாகக்கொண்டு தான் காணவேண்டுமென்று கூப்பிட்டு அது மேல்கண்ட யோகங்களில்லாமல் கைகூடுகிறதில்லை என்று வருந்தலாயினர். பிறகும் 5, 2, 9-ல்

மேவித் தொழுதுய் மனீர்கள் வேதப்புனித இருக்கை
நாவில் கொண்டு அச்சுதன் தன்னை ஞான விதிபிழை [யாமே
பூவில் புகையும் விளக்கும் சாந்தமும் நீரும் மலிந்து
மேவித்தொழும் அடியாரும் பகவரும் மிக்கதுலகே

என்பர்.

தாம் கண்டுகந்த காட்சியில், இந்த லோகத்தில் அநேகர் வேத நல் இருக்குகளை நாவால் சொல்லி மனதை அவனிடத்தில் விதிப்படிவைத்துக் கிரமம் போல் பூஜைசெய்து உய்யும் பக்தர்களும், அவன் திறத்தே எப்போதும் வீழ்ந்து அவனன்றி மற்றொன்றும் சிந்தியாத மனத்தனரான பாகவதர்களும் எக்காலத்திலும் பலர் உளர்; நீங்களும் அவனை அடையும் பயனைத்தவிர மற்ற எவ்விதத்திலும் இழியயோ அவனையே பஜித்துப் பிழையுங்கோள்" என்று, ஏனைய

வருக்கு உபதேசிக்கிறார். தம்முடைய ஏற்றமான மன நிகழ்ச்சிக்கொப்பத் தாம் நிகழ்த்தும் ஒப்பற்ற ஒரு வாறான பக்தியோகத்தை நாலாம் திருவாய்மொழி 3-ம் பதிகத்தில் தனதாவியும் அவனதாவியும் ஒன்று பட்டு நின்றதை உரைக்கமாட்டாதவராய் "விரை கொள் பூவும் நீரும் கொண்டு ஏத்தமாட்டேனேனும் உன்உரைகொள் ஜோதித் திருவுருவம் எனதாவி மேலதே" என்றும், "உன் கமலமன்ன குரைகழல் என் சென்னிக்குக் கோலமாம்" என்றும், "கண்ணிப்பூமாலை என்னுயிர் காதலெ"ன்றும், அஃதே பல கலன்கள் ஏறும் உடையென்றும், "எனதுயிரே பூத்தண் மாலை நெடுமுடிக்குப் புனையும் கண்ணி" என்றும் "பூசும் சாந்து என் னெஞ்சமே" என்றும், 'புனையும் கண்ணி என் வாசக" மென்றும் இப்படிகளில் தான் செய்யும் மானஸாராதனத்தை (Enlightened Worship) "தேனும் பாலும் கன்னலும் அமுதமாகித் தித்திப்ப இயற்றினே"னென்றும் கூறி முடிக்கிறார். இவ்வண்ணந் தான் கற்பித்துக் கொண்டபடி யோகம் செய்து நடந்தாரா? அல்லது "பக்தியோகம்" என்றதைக் கூறியுள்ளபடி உல்லாசமாக அனுஷ்டித்தாரா? என்று கேட்டால், இம்மஹானுபாவன் இத்துறையில் இழியவில்லை என்றே விடைகூற வுள்ளது. பலனடைவதில் அதாவது மோக்ஷத்தை அடையப்பக்தியோகம் போல் அதற்கு எதிர்த் தட்டாயுள்ளதும் பக்திபிரமோதிகளை அகத்துச்செறியப் பொதிந்துள்ளதுமான "பிரபத்தி' யோகத்தில் தாம் இழிந்து "உலகமுண்ட பெருவாயா" என்கிற தசகத்தில் அந்த மார்க்கத்தை அநுஷ்டித்து, அந்தமில் பேரின்பத்தடியாரோடு கூடி இருக்கும்இருப்பாகிய அவாவற்ற வீட்டைப்பெற்றார். "பிரபத்தி" மார்க்கம் உபநிஷத்துகளில் ஓதியிருப்பதைப் பூர்வம் இருஷிகள் அனுஷ்டித்திருந்தாராயினும் இம்மஹாநுபவன்தான் பின்னுளார் தெளிவின் பொருட்டுத்தாம் அநுஷ்டித்துக் "குலபதி"யாய் உலகுள யாவரும் உய்யும்படி பிரசாரப்படுத்தினார். ஆகையால்தான் (Later-day Vaishnavites) தற்கால வைணவர்கள் இம்மஹானைப் "பிரபந்நஜந சந்தான கூடஸ்தர்" என்று சென்னியால் வணங்கிக் கொண்டாடுகிறார்கள். "பிரபத்தி" என்னும் மார்க்கம் "நியாஸம்" என்கிற பெயரால் மோக்ஷசாதனமாய் வேதமாபில் ஏற்பட்ட முப்பத்திரண்டு வித்தையில், அதாவது கடவுள் அறியும் மார்க்கங்களில், ஒன்று. இதை விவரிக்கப்புகின் நிரம்ப வேதாந்த தத்துவங்களைக் கூறவேண்டி வரும். ஆகையால் இது நிற்க.

பகவத்கீதையின் பத்தாவது அத்தியாயம் "விபூதி விஸ்தரயோக" அத்தியாயத்தில் உள்ள தத்துவம் யாவற்றும் அடங்க இம்மஹான் மூன்றும்பத்து நான்காவது தசகத்தில் மனதில் உறையும்படி சரசமாய்ப் பாடியுள்ளார். மேல்கண்ட அத்தியாயத்தில் 20 சுலோகமுதல் 42-வது சுலோகமகப்படக் கூறியுள்ளதை மேல்படி தசகத்தினிறுதியில் சங்காஹிக்கின்றார். ஸ்ரீ கிருஷ்ணபகவான் தாம் எல்லா வஸ்துக்களிலும் வியாபித்து அவைகளுக்குத் தாரகனாயிருந்து சக்தியை அளித்து அவற்றை நடத்திவைக்கிறேனென்று அந்த அத்தியாயம் 20, 39, 40, 42 சுலோகங்களில் சொல்லியதை அழகாயும் தெளிவாயும் நிரூபிக்கிறார். இது சற்றே விவகரிக்க உளது. சேதனமான ஜீவாத்மா அசேதனமான ஜடாத்தில் பிருகிருதிக்குள்ள குணங்களில் தோய்வில்லாமல் அதின் அகத்திலிருந்து வியாபித்து அதைத் தரித்து நடத்த நாம் காண்கிறோம். ஜீவாத்மாக்கள் தங்கள் தங்கள் பூர்வ பாபபுண்ணிய கர்மங்களுக்கு ஏற்ப ஜந்மம் எடுக்க நியமிக்கப்பட்டுளார். அதிற்கேற்ப அவர்கள், பகவான் ஆஞ்ஞையால் "அவரவர்சமையம் தோறும்" அதாவது சுகதுக்கங்களுக்கு ஆட்படும்படி தக்க தேஹங்களில் அமைக்கப்படுகிறார்கள். எப்படிப் பிருகிருதிக்குள்ள லயாலயம் குணகருத்துருத்தவம் ஜீவாத்மாவுக் கில்லையோ, அதுபோலவே ஜீவாத்மாவுக்குள்ள கர்மபந்த சுகதுக்கம் அதில் அநுப்பிரவேசித்துள்ள பாமாத்மாவுக்கு இல்லை என்று ஹேதுவும் உதாஹரணமும் காட்டுகிறார். தத்துவத்தையும் போதிக்கிறார். எவ்விதம் ஜீவாத்மா உடலத்துக்குச் சரீரியோ, அதுபோல் பரமாத்மா ஜீவாத்மாவுக்குச் சரீரி என்று, "யாவையும் எவரும் தானாய் அவரவர் சமையம்தோறும் தோய்விலன் புலனைந்துக்கும் சொலப்படான் உணர்வின் மூர்த்தி ஆவிசேருயிரின் னுள்ளால் ஆதுமோர் பற்றில்லாத பாவனையதனைக் கூடில் அவனையும் கூடலாமே". "உயிரில் உள்ளவன்" ஜீவாத்மா; "உணர்வின் மூர்த்தி" என்றால் ஞான சுவரூபன் என்றர்த்தம்.

இவ்வர்த்தத்தை உபநிஷத்து விளக்குகையில், "ஒரு மரக்கிளையில் இரண்டு பக்ஷிகள் உட்கார்ந்து வளர்ந்து வருகின்றன. ஒன்று அம்மரத்தின் பழங்களைத்தின்று அநுபவித்து வாழ்கிறது. மற்றொன்று அப்பழங்களை நுகராமல் பார்த்துக்கொண்டு ஏனைய பக்ஷியுடன் உறவாடி அம்மாத்திலேயே தங்கி வாழ்கின்றது" என்னும். மரம்-பிருகிருதிபலன். தின்னும் பக்ஷி - ஜீவாத்மா. சாக்ஷியாய்க் கூடவிருக்கும் பக்ஷி - பரமாத்மா.


## நாஷனல் இன்ஷுயரன்ஸ் கம்பனி, லிமிடெட்.

(ஹெட் ஆபீஸ்:—கல்கத்தா)

இந்திய இன்ஷுயரன்ஸ் ஆபீஸ்களில் மிகவும் முன்னேறிவரும் ஆபீஸ் இதுவொன்று.

குறைந்த பிரீமியமும், மற்றவகைகளிலுள்ள பலவித சவுகரியங்களும் இக்கம்பனியை எல்லாரும் விரும்புவதற்குக் காரணமாயிருக்கின்றன.

வேறெங்கேயாகிலும் நீங்கள் இன்ஷுர் செய்து கொள்ளத் தீர்மானிப்பதன்முன் தயவுசெய்து, எங்கள் ரேட்டுக்களையும் எம்மிடத்தில் இன்ஷுர் செய்வதால் வரக்கூடிய நன்மைகளையும் லாபங்களையும் ஒத்திட்டுப் பாருங்கள்.

பிராஸ்பெக்டஸ் ஏஜன்ஸி முதலியவைகளுக்கு:—

கெ. எஸ். கோபாலய்யா, கிளைக்காரியதரிசி

மதராஸ் பிரான்ச், லோன் ஸ்கோயர்,
பிராட்வே, சென்னை.



## கணித சோதிடம்.

கணித ரீதியாய்ப் பலன் கூறுபவர். ஒருவருஷத்திற்கு மாதவாரியாகவோ அல்லது தசாபுக்தியாகவோ பலன் எழுத ரூ. 2. ஒரு வருஷத்திற்கு ஒன்பது பலனாக எழுத ரூ 10. தினப்பலன் ரூ. 20. ஜாதகமில்லாதவர் பேரையும், கடிதம் எழுதும் நேரத்தையும் அறிவிக்கவும். ஏழு கேள்விக்கு ரூ. 1. பொருத்தம் பார்க்க ரூ. 1. ஜாதகம் குறிக்க ரூ. 2. மாணத்தைப்பற்றி வருஷ மாதந் தேதி நாழியுடன் அஷ்டவர்க்க பலன் எழுத ரூ. 25. புத்திர சந்தான மில்லாதவருக்குத் தோஷ நிவர்த்தி கூற ரூ. 5. அன்னிய நாட்டார் முன்பணம் அனுப்பவேண்டும்.

'அப்பாஜி சோதிடரை ஓராண்டாய் அறிவேன். அவரது சோதிடப்புலமையும் பலன்கூறும் திறத்தையும் கண்டுள்ளேன். பலன் சரியே நடந்து வருகின்றது' என, திரு T. V. கலியாணசுந்தர முதலியார் கூறுகின்றார்.

அப்பாஜி ஜோஸ்யர்,

321, ஐரோட், திருவல்லிக்கேணி, சென்னை.




# தமிழ்ப் பாடம் 102.

## [ அஷ்ட பிரபந்தம். ]

[ 971-வது பக்கத் தொடர்ச்சி ]

### திருவரங்கக் கலம்பகம்.

குருகுறங்கு கானலே கருநிறங்கொள் பானலே
கொடியிருண்ட ஞாழலே நெடியகண்ட னீழலே
பொருதரங்க வேலையே நிருதரங்க மாலையே
போதயின்ற கம்புளே யேதையின் றியம்புகேன்
திருவரங்க ரிணையிலா வொருபுயங்க வணையிலே
திகழ்வலக்கை கீழதா முகிழ்மலர்க்கண் வளர்வதோர்
கருணைநம்பு வதனமு மருணவிம்ப வதரமுங்
காவிகொண்ட மேனியு மாவிகொண்டு போனவே.

கருத்து:—திருவரங்கரைப் பிரிந்திருக்க ஆற்றாதவோர் தலைவி கடற்கரைசென்று அங்குள்ளனவற்றைக் கூப்பிட்டுத் தன்கருத்தைக் கவர்ந்த அரங்காது அவயவங்களைச் சொல்லி இரங்குவாள்போல் கவி தன் மனதைத் தெரிவிக்கின்றார்.

பதவுரை.

குருகு - நாரைகள், உறங்கு - தங்கிஉறங்குகின்ற, கானலே - கடற்கரைச் சோலையே! கரு - கருமையான, நிறம் - நிறத்தை, கொள் - கொண்ட, பானலே, குவளையே! கொடி-(தன்னைச்சுற்றிப் படர்ந்திருக்கிற) கொடிகளால், இருண்ட - இருண்டிருக்கின்ற, ஞாழலே-குங்குமமரமே! நெடிய-நீண்ட, கண்டல் - தாழையின், நீழலே-நிழலே! பொரு-மோதுகின்ற, தரங்கம் - அலைகளையுடைய, வேலையே - கடலே! நிருதர் - இராக்ஷஸர்களுடைய, அங்கம் - சரீரம்போன்ற, மாலையே - மாலைக்காலமே! போது - மலர்களை, அயின்ற - தின்றிருக்கின்ற, கம்புளே - சம்பங்கோழியே!— இன்று - இப்பொழுது, ஏதை - எதைத்தான், இயம்புகேன் - சொல்லப்போகிறேன்—

திரு - அழகிய, அரங்கர் - அரங்கநாதர், இணை - தனக்குச் சமானம், இலா - இல்லாத, ஒரு - ஒரு, புயங்கம் - பாம்பாகிய, அணையில் - படுக்கையில், திகழ் - விளங்குகின்ற, வலக்கை - தனது வலது கையை, கீழது ஆ - (தலையின்) கீழாக வைத்துக் கொண்டு, முகிழ் - குவிந்திருக்கின்ற, மலர் - தாமரைபோன்ற, கண் - கண்கள், வளர்வது - துயில்கின்ற, ஓர் - ஒப்பற்ற, கருணை - அருளானது, நம்பு- இவருக்கு உண்டென்று நம்பிக்கை விளைவிக்கும், வதனமும் - முகமும்; அருண - சிவந்த, விம்ப - கோவைப்பழம் போன்ற, அதரமும் - உதடுகளும்; காவி கொண்ட - குவளைமலர்போன்ற, மேனியும் - அவரது நிறமும்; ஆவி - (எனது) ஆவியை, கொண்டு போனவே - கவர்ந்துகொண்டு போய்விட்டனவே!

---

வாழுமவுலித் துழாய்மணமுமகரக்குழைதோய்விழியருளு
மலர்ந்தபவளத்திருநகையுமார்பிலணிந்தமணிச்சுடருந்
தாழுமுளரித்திருநாபித்தடத்துளடங்குமனைத்துயிருஞ்
சரணகமலத்துமைகேள்வன்சடையிற்புனலுங்காணேனு
லாழமுடையகருங்கடலினகடுகிழியச்சுழித்தோடி
யலைக்குங்குடகாவிரிநாப்பணைவாயரவிற்றுயிலமுதை
யேழுபிறப்பிலடியவரையெழுதாப்பெரியபெருமானை
யெழுதவரியபெருமானென்றெண்ணாதெழுதியிருந்தேனே

கருத்து:— திருவரங்காது உருவத்தைச் சித்திரமெழுதி அதைக்கண்டாகிலும் ஆறுதல் அடையலாம் என்று எண்ணிய தலைவி, அரங்கனது மேன்மையெல்லாம் அச்சித்திரத்தில் அமைய இயலாமையால் அது குறைவுபட்டிருப்பதைக் கண்டு தன் பேதைமையை நினைத்து இரங்குகின்றாள் போல், கவி அரங்கனது பெருமையைப் பாராட்டுகின்றார்.

பதவுரை.

வாழும் - யாவரையும் வாழ்வித்துத் தானும் வாழ்கின்ற, மவுலி - முடியில் சூடிய, துழாய் - துளசியினது, மணமும் - வாசனையும்; மகரக்குழை - (காதிலணிந்த) மகரகுண்டலங்களில், தோய் - போய்த் தீண்டுகின்ற, விழி - கண்களின், அருளும் - கருணையும்; மலர்ந்த - மலர்ந்திருக்கின்ற, பவளம் - பவளம்போன்ற வாயில், திரு - அழகிய, நகையும் - சிரிப்பும்; மார்பில் - மார்பில், அணிந்த - அணிந்த, மணி - கௌஸ்துபரத்தினத்தில், சுடரும்- ஒளியும்; தாழும் - ஆழ்ந்த, முளரி - தாமரைபோன்ற, திரு - அழகிய, நாபித்தடத்துள் - நாபியினிடத்தில், அடங்கும் - அடங்கியிருக்கின்ற, அனைத்து - எல்லா, உயிரும் - சீவராசிகளையும்; சரண கமலத்து - பாதத் தாமரையில், உமை - பார்வதிக்கு, கேள்வன் - நாயகனாகிய சிவபிரானது, சடையில் - சடையில் தங்கும், புனலும் - கங்கை நீரையும், காணேன் - நான் இச்சித்திரத்தில் காணவில்லை.—ஆகையால்,

ஆழம் உடைய - ஆழமான, கரும் கடலின் - கரிய கடலின், அகடு - வயிறானது, கிழிய - கிழியும்படி, சுழித்து - சுழித்துக் கொண்டு, ஓடி - ஓடி, அலைக்கும் - அலைக்கின்ற, குடகாவிரி - மேலைக்காவேரியின், நாப்பண் - நடுவில் (உள்ள அரங்கத்தில்) ஐ - ஐந்து, வாய் - வாய்களையுடைய, அரவில் - பாம்பின்மீது, துயில் - நித்திரை செய்கின்ற, அமுதை - அமிர்தம் போன்றவனும், அடியவரை - தனது பக்தர்களை, ஏழு - ஏழுவகையான, பிறப்பில் - பிறவிகளில், எழுதா - சேர்க்காத, பெரிய பெருமானை - பெருந்தன்மையுடைய பெருமானும் ஆகிய அரங்கனை,

எழுத - சித்திரத்தில் எழுத, அரிய - முடியாத, பெருமான் - பெருமான், என்று - என்று, எண்ணாமல் - உணராமல், எழுதி - வீணாக எழுதி, இருந்தேனே - கிடக்கின்றேனே.

---

வாடியோட வனசமன்ன விருகண்வெள்ள மருவிபோன்
மருவியோட மதனன்வாளி யுருவியோட வாடையூ
டாடியோட வன்றிலோசை செவியிலோட வண்டுழா
யாசையோடு மெங்கள்பேதை யாவியோட னீதியோ
மோடியோட வங்கிவெப்பு மங்கியோட வைங்கரன்
முடுகியோட முருகனோட முக்கணீசன் மக்களைத்
தேடியோட வாணனாயி ரம்புயங்கள் குருதிநீர்
சிந்தியோட நேமிதொட்ட திருவரங்க ராசரே. 15

கருத்து:—"வாணாசுரனை வென்று அவனது மகள் உஷையைப் பிரத்யும்நனுக்கு மணஞ்செய்வித்த அரங்கா, உன்மேல் காதல்கொண்டு வருந்தும் இவளை நீ கண்ணெடுத்தும் பார்க்காமலிருத்தல் நீதியோ" என்று தோழிமார் மெல்லென ஏசுகின்றார்.

பதவுரை.

(வாணனுக்குத் துணையாய்ப் போர்செய்ய வந்த) மோடி - துர்க்கை, ஓட - ஓடவும்; அங்கி - (சிவபிரான் ஏந்திய) மழு, வெப்பு - தனது வெப்பம், மங்கி ஓட - (உன்னைக்கண்ட பயத்தால்) மங்கிப்போகவும்; ஐங்கரன் - ஐந்து கரங்களையுடைய விநாயகன், முடுகி - விரைந்து, ஓட - ஓடவும்; முருகன் - முருகன், ஓட - ஓடவும்; முக்கண் - மூன்று கண்களையுடைய, ஈசன் - பரமசிவன், மக்களை - தன்னுடைய மைந்தர்களை, தேடி - தேடிக்கொண்டு, ஓட - ஓடவும்; வாணன் - வாணாசுரனது, ஆயிரம் - ஆயிரம், புயங்கள் - தோள்கள், குருதிநீர் - இரத்தம், சிந்தி ஓட - சொரிந்து பெருகும்படி, நேமி-சக்ராயுதத்தை, தொட்ட -ஏவிய, திரு அரங்க ராசரே - திருவரங்க நாதரே,

வனசம் - தாமரை, அன்ன - போன்ற, இருகண்- இரண்டு கண்களும்; வாடி ஓட - வாடிப்போகவும்;

வெள்ளம் - (அதனிலிருந்து பாய்கின்ற) நீர், அருவி போல் - அருவியைப்போல், மருவி ஓட - வழிந்து ஓடவும்; வாடை - வாடைக்காற்றானது, ஊடு - இடையே, ஆடி - அடித்து, ஓட - செல்லவும்; அன்றில் - அன்றிலினது, ஓசை - குரல், செவியில் - அவளது காதில், ஓட - புகவும், (வருந்துகின்ற) எங்கள் பேதை - எமது பேதையாகிய இவளது, ஆவி - உயிரானது, வள் - வளப்பம் உடைய, துழாய் - துளசியை உன்னிடம் பெறவேண்டும் என்ற, ஆசையோடு - ஆசையுடனே, (அது நிறைவேறாமல்) உடல் நீங்கிவிடும்படி நீ சும்மா இருத்தல், நீதியோ - உனக்குத் தர்மமாகுமா!

## இலக்கணம்

நெடிற்றொடர் உயிர்த்தொடர்க் குற்றியலுகரங்கள் ட், ற், என்ற மெய்களின்மேலேறியிருக்க, வருமொழி முதல் உயிரோடு புணருங்கால், அக் குற்றியலுகரம் போய்விடுவது மல்லாமல் அது ஏறியிருந்த மெய் இரட்டி வருமொழிமுதல் உயிரை ஏற்றுக்கொள்வதும் ஆகலாம் என்பதைச் சென்றவாரம் சொன்னோம். இவ்வாறு மெய் எப்பொழுது இரட்டும், எப்பொழுது இரட்டாது என்பதை நிலைமொழியும் வருமொழியும் என்ன தொடரில் அமைந்திருக்கின்றன என்பதை நோக்கி உணர வேண்டும்.

I ஐ, ஆல், ஆன், ஒடு ஓடு, இல் இன், முதலிய வேற்றுமை உருபுகளோடு சேரும்போது, ட், ற், மெய்கள் பெரும்பாலும் இரட்டும் :—

மாடு + ஐ = மாட்டை; குவடு + ஓடு = குவட்டொடு; சேறு + ஆல் = சேற்றால்; வயிறு + இல் = வயிற்றில்.

II பண்புத் தொகைகளில் இரட்டும் :—

காடு + அரண் = (காடாகிய அரண்) = காட்டரண்

குருடு + ஆனை = குருட்டானை; ஏறு + ஏனம் = ஏற்றேனம். வயிறு + உறப்பு = வயிற்றுறப்பு. புனிறு + ஆ = புனிற்றா. (புதியதாய் ஈன்றதாகிய பசு)

III உருபும் பயனும் உடன் தொக்க வேற்றுமைத் தொகைகளில் இரட்டும் :—

காடு + ஆனை (காட்டில் வசிக்கும் ஆனை, ஏழாம் வேற்றுமை உருபும் பயனும் உடன்தொக்க தொகை) = காட்டானை.

நாடு + அரசன் (நாட்டை ஆளும் அரசன்—2ம் வேற்றுமை உருபும் பயனும் உடன் தொக்க தொகை) = நாட்டரசன்.

கயிறு + ஏணி (கயிற்றால் செய்த ஏணி—3ம் வேற்றுமை உருபும் பயனும் உடன் தொக்க தொகை) = கயிற்றேணி.

IV ஆறும் வேற்றுமைத் தொகையில் இரட்டும்: —

உதடு + ஆட்டம் = உதடாட்டம்
மாடு + அடி = மாட்டடி
ஆறு + அலை = ஆற்றலை
ஞாயிறு + ஒளி = ஞாயிற்றொளி

மேற் சொன்ன இந்நான்கு இடங்களில்தான் ட், ற் என்னும் மெய்கள் இரட்டக் காண்கின்றோம். மற்றத் தொடர்களில் அவை பெரும்பான்மை இரட்டுவதில்லை:—

வீடு + இல்லை = வீடில்லை. (எழுவாய்த் தொடர்)

மாடு + ஓட்டினான். மாடோட்டினான் (2ம் வேற்றுமைத் தொகை)

முகடு + ஏறினான் = முகடேறினான் (7ம் வேற்றுமைத் தொகை)

ஓடு + என்றான் = ஓடென்றான் (வினைமுற்றுத்தொடர்)

பிளிறு + ஆனை = பிளிறானை (வினைத்தொகை)

முன் சொன்ன விதிகள் நெடிற்றொடர் குற்றியலுகரத்திற்கும் உயிர்த்தொடர்க் குற்றியலுகரத்திற்கும் மாத்திரந்தான் பொருந்தும்; அதுவும் அவை நெடிற்றொடர் உயிர்த்தொடர்களாய் இருப்பது மாத்திரமல்லாமல், ட் என்ற மெய்யிலாவது ற் என்ற மெய்யிலாவது ஏறியிருக்கவும் வேண்டும். ஆதலின்,

படகு + ஓட்டம் = படகோட்டம் என்று ஆகுமேயல்லாது உயிர்த்தொடர்க் குற்றியலுகரமாயிருந்தாலும், ஆறும்வேற்றுமைத் தொகையிலும், படக்கோட்டம் என்றாகாது.

காது + அணி = காதணி, என்றாகுமே அல்லாது, நெடிற்றொடராயிருந்தாலும், 7ம் வேற்றுமை உருபும் பயனும் உடன் தொக்க தொகையிலும், காத்தணி என ஆகாது.

எனினும், எருது + அடி = எருத்தடி, எனத் தகர மெய் இரட்டிப் புணர்வதும் உண்டு.

---

இனி, மென்றொடர்க் குற்றியலுகரங்கள் வருமொழிமுதல் உயிரோடு எவ்வாறு புணரும் என்று பார்ப்போம்.

அவை பெரும்பான்மை, பந்து + அடித்தான் = பந்தடித்தான், வண்டு + ஈட்டம் = வண்டீட்டம், சங்கு + ஊதினான் = சங்கூதினான், என்பனபோல், குற்றியலுகரம் மெய்யைவிட்டு ஓடிவிட அந்த மெய்யின்மேல் வருமொழி முதல் உயிர் ஏறிக்கொள்வதே முறை. எனினும் சிறுபான்மை,குற்றியலுகரம்போய் அந்த மெய்யின்மேல் வருமொழி உயிர்வந்து ஏறுவது மல்லாமல், அந்தக் குற்றியலுகரம் இருந்த மெய்க்குப் பக்கத்திலுள்ள மெல்லினமெய் தனக்கு இனமான வல்லினமெய்யாகத் திரிவதும் உண்டு:—

இரும்பு + ஆணி = இரும்பு + ஆணி = இரும்ப் + ஆணி = இருப்ப் + ஆணி = இருப்பாணி.
வேம்பு + இலை = வேப்பிலை.
குரங்கு + ஆட்டம் = குரக்காட்டம்.
கன்று + ஆ = (கன்றை உடைய பசு) = கற்றா.
என்பு + உடம்பு = எற்புடம்பு.

இவ்வாறு, ஈற்றுக்கு அயலிலிருக்கும் மெல்லின மெய் அதற்கு இனமானவல்லின மெய்யாகத் திரிவது வேற்றுமைத் தொகையிலும், அல்வழியிலும் காணலாம். ஆனால், மேற்காட்டிய உதாரணங்களிற் போல் திரிவன சிறுபான்மையே. பெரும்பான்மை திரிவதில்லை.

அஷ்ட பிரபந்தம் முற்றிற்று.

---

அகத்தியமுனிவர் அருளிச்செய்த ஆறெழுத்தந்தாதி:— முருகக் கடவுளை முழுமுதற் பொருளாக உபாசனை செய்வதற்குறித்தாய் ஷடாக்ஷர மந்திரத்தின் வைபவத்தை அகத்தியரே பாடியுளர் எனக் கருதப்படுகின்ற நூறு செய்யுள் கொண்ட நூல், பென்ஷன் டாக்டர் V. S. அருணசலம்பிள்ளை யவர்களால் விரிவும் தெளிவும் பொருந்திய உரையோடு பதிப்பிக்கப் பெற்றது. விலை 12 அணா.

வி. பி. சார்ஜ் வேறு. கலாநிலயம், வேப்பேரி, சென்னை.



டால்ஸ்டாய் எழுதிய

# எண்சாண் உடம்பிற் கெவ்வளவு நிலம் வேண்டும்.

## "HOW MUCH LAND DOES A MAN NEED" BY TOLSTOY.

[975-வது பக்கத் தொடர்ச்சி.]

### 7

அதி மிருதுவான சயநத்தின்மீது படுத்திருந்தாலும் அன்றிரவு முழுவதும் பாஹோமுக்கு நித்திரை வரவில்லை. நிலத்தைப்பற்றியே எண்ணமிட்டுக்கொண்டிருந்தான்.

"நாளையதினம் எனக்குவேண்டுமளவு நிலம்கிடைக்கப்போகிற தென்பதற்குச் சந்தேகமில்லை. ஒருநாளைக்குள் முப்பத்தைந்து மைல் எளிதில் நடந்துவரலாம். தவிரவும் எனது அதிர்ஷ்டத்தால் இக்காலம் பகற்போது அதிகம். முப்பத்தைந்து மைல் எல்லைக்குள் எவ்வளவு பெரிய நிலப்பரப்பு அடங்கும்! கீழான நிலங்களை விற்றுவிடுவேன். அல்லது குடியானவர்களுக்குக் குத்தகைக்கு விட்டுவிடலாம்; நல்ல முதல்தரமான நிலங்களையெல்லாம் நான் சொந்தத்தில் பயிர் செய்வது நலம். இன்னும் சிலஉழவு எருதுகள் வாங்க வேண்டும்; அதிக ஆட்களும் அமர்த்தவேண்டியிருக்கும். சுமார் நூற்றைம்பது ஏகரா உழவு பூமியாய் வைத்துக் கொண்டு மிகுதியை மேய்காலாக உபயோகிக்கலாம்."

இரவுமுழுவதும் தூக்கம்பிடிக்காமல் இவ்வாறு எண்ணமிட்டுக்கொண்டிருந்து கடைசியில் உதய காலத்துக்குச் சற்றுமுன்தான் சிறிது கண்ணயரலானான். கண்ணை மூடிய க்ஷணமே ஒரு கனவு கண்டான். அதே கூடாரத்தில் தான் படுத்துக்கொண்டிருக்க வெளியில் யாரோ நின்று நகைத்துக்கொண்டிருப்பதாகத் தோன்ற வெளியில் சென்று பார்த்தான். பாஷ்கீர்களின் தலைவர் பெருஞ் சிரிப்புச் சிரித்துக்கொண்டிருப்பதைப் பார்த்து, எதற்காக நீர் இவ்வளவு சிரிப்புச் சிரிக்கிறீர், என்று கேட்டுக்கொண்டே அவாருகே சென்றான். சமீபத்தில் போனவுடன் அவர் பாஷ்கீர் தலைவராயிராமல் தன் வீட்டில் தங்கியிருந்த வியாபாரியெனத் தோன்றியது. 'நீர் இங்கே வந்து வெகுநேர மாயிற்றா?' என்று கேட்கலாமென்று உத்தேசித்துக் கொண்டிருக்கையில், அவ்வுருவம் வியாபாரியாயுமிராமல் சில வருஷங்களுக்குமுன் தன்னுடைய பழையவீட்டில் வந்திருந்த குடியானவனென,அவன்நினைத்தான். பின்னும் நெருங்கிப் பார்க்கையில் 'பாஷ்கீர் தலைவருமல்லர், வியாபாரியுமல்லர் குடியானவனுமல்லன்.அது ஒருபிசாசு உருவமெனத் தெளிந்தான். அவ்வுருவத்தின் எதிராகப் பூமியின் மீது காலில் பாதரக்ஷையின்றி ஒரு மனித உருவமும் படுத்துக்கிடந்தது. நெருங்கிப் பார்த்தான். கீழே படுத்திருந்தவன் உயிரற்றுப் பிணமாகக் கிடப்பதாகவும் அவ்வாறு கிடப்பது தனது உருவம்தானென்றும் அவனுக்குத் தென்பட்டது. திடுக்கிட்டு விழித்தெழுந்தான்.

"என்ன பேய்க்கனவெல்லாம் காண்கிறேன்" என்று எழுந்து உட்கார்ந்து பார்க்கக் கிழக்கு வெளுத்திருந்தது. உடனே வண்டியண்டைபோய்த் தன் ஆட்காரனைத் தட்டியெழுப்பி வண்டியைக்கட்டச்சொல்லிவிட்டுப் பாஷ்கீர்கள் கூடாரத்துக்குப்போய் 'நிலத்தை அளக்கப் புறப்படுவதற்கு நேரமாகிறது' என்று சொல்லி அவர்களை யெல்லாம் எழுப்பினான்.

பாஷ்கீர்கள் எழுந்து தங்கள் தலைவரையும் எழுப்பி எல்லோருமாய் உட்கார்ந்து கூமிஸ் சாப்பிட்டனர். பாஹோமையும் தேக்கஷாயம் சாப்பிடும்படிசொல்ல அவன் 'வீண் காலதாமதமாகிறது; புறப்படுவதாயிருந்தால் நாழிகையாயிற்று, எனக்குத் தேக்கஷாயம் வேண்டாம்" என்று மறுத்துவிட்டான்.

### 8

பாஷ்கீர்கள் பிரயாணத்துக்குத் தயாராகிச் சிலர் குதிரைகளின்மீதும் சிலர் வண்டிகளிலும் புறப்பட்டனர். பாஹோம் ஒரு மண்வெட்டியுடன் தனது ஆள்காரனை யழைத்துக்கொண்டு வண்டியில் சென்றனன். குறித்த இடத்திற்குப் போகும்போது சூரியன் உதயமாகும் தருணமா யிருந்தது. யாவரும் வண்டியை விட்டு இறங்கி ஒரு சிறிய குன்றின்மீதேறி ஓர் இடத்தில் சேர்ந்தனர். பாஷ்கீர்கள் தலைவர் பாஹோமை யழைத்துத் தமது கரத்தை நீட்டி 'இதோ, கண்ணுக்குத் தெரிந்தமட்டும் எங்களுடைய பூமிதான். இதனில் எப்பாகம் வேண்டுமாயினும் நீர் கொள்ளலாம்' என்றார்.

பாஹோம் பரம சந்தோஷமடைந்தான். எல்லாம் செழிப்பான பூமி; எங்குப்பார்த்தாலும் ஒரே சமமாகவும் மிகச் செழிப்பாகவு மிருந்தது. ஆங்காங்குப் புற்கள் ஆள் உயரத்துக்குமேல் ஓங்கிவளர்ந்திருந்தது. பாஷ்கீர்கள் தலைவர் தமது குல்லாவைக் கழற்றிக் கீழே வைத்து 'இந்த இடத்திலிருந்து புறப்பட்டுத் திரும்பவும் இதே இடத்துக்கு வந்துசேர வேண்டும். இடையிலுள்ள பூமி யெல்லாம் உமதேயாகும்' என்றார்.

பாஹோம் தன் சட்டைப்பையிலிருந்து பணத்தை யெடுத்து அக்குல்லாவில் வைத்தான். மேற்சட்டையைக் கழற்றி எறிந்தான். ஒரு ரொட்டியும் சிறிது ஜலமும் எடுத்துக்கொண்டு காலில் பாதரக்ஷை தரித்துப் புறப்படுவதற்குத் தயாரானான். ஆள்காரனும் மண்வெட்டியைக் கொண்டுவந்து கொடுத்தான். எந்தப் பக்கம் பார்த்தாலும் ஒரே சமபூமியாகவும் செழிப்பாகவு மிருந்ததால் எந்தத்திக்குப் புறப்படுவதென்று சிறிது திகைத்து நின்றான்.

கடைசியில் "எந்தத்திக்குப் புறப்பட்டாலென்ன, கதிரவனை நோக்கித்தான் செல்வோமே" என்று நிச்சயம்செய்து அடிவானத்தை நோக்கிச் சூரியோதயத்தை எதிர்பார்த்து நின்றான்.

சீக்கிரம் புறப்படவேண்டும்; குளிர்ந்த நேரத்தில் விசையாக நடந்து செல்லலாம், என்று நினைத்தான்.

சூரியனுடைய பிம்பம் அடிவானத்தினின்று கிளம்பியவுடன் பாஹோம் மண்வெட்டி கைக்கொண்டு இந்த மண்யாத்திரைக்குப் புறப்பட்டுவிட்டான்.

முதலில் அதிவேகமாயுமில்லாமல் அதிக மெள்ளவுமில்லாமல் நிதானமாக நடந்தான். ஓர் ஆயிரகஜ தூரம் சென்றபின் அவ்விடத்தில் அடையாளத்துக்காக ஒரு சிறு பள்ளம் வெட்டினான். இதற்குள் கால்களுக்கும் சிறிது ஊக்கம் அதிகரிக்கவே சிறிது வேகமாக நடக்கலானான். சிறிது தூரத்துக்கப்பால் இன்னொரு குழிவெட்டி அடையாளம் செய்துவிட்டுக் குன்றின்பக்கம் திரும்பிப்பார்த்தான். அவ்விடத்தில் ஜனங்கள் நிற்பதும் வண்டிகளின் சக்கரங்கள் சூரிய வெளிச்சத்தில் ஜ்வலிப்பதும் நன்றாய்க் கண்ணுக்குப் புலப்பட்டன. ஏறக்குறைய மூன்று மைல் நடந்திருக்கலாம் என்றுநினைத்தான்.சற்றுப் புழுக்கமாகத் தோன்றவே பாஹோம் உள்சட்டையைக் கழற்றித் தோள்மீது போட்டுக்கொண்டு நடந்து சென்றான். சாப்பாட்டுக்குச் சரியான நேரமாயிற்று.

"முதல் பகுதி முடிந்தது. இன்னும் அஸ்தமனத்துக்குள் மூன்று பகுதிகள் செல்லவேண்டும். இந்தப் பாதரக்ஷைகளால் நடைவேகம் தடைப்படுகிற"தென அவைகளைக் கழற்றி அரைக்கச்சையில் தொங்கவிட்டுக்கொண்டு நடக்கலானான். நடையும் சற்று சுலபமா யிருந்தது.

'இன்னும் ஒரு மூன்று மைல் தூரம் சென்று அப்புறம் இடதுபுறம் திரும்பலாம்; இங்கே பூமி அதிக செழிப்பாயிருக்கிறது; இவ்விடத்தில் சிறிது பூமியிருப்பது அவசியம்;என்னவிசித்திரமானதேசம்! செல்லச்செல்லச் செழிப்பு அதிகரித்துத் கொண்டே போகிறது" என்று நினைத்தான் பாஹோம்.

நேராக ஒருமைல் தூரம் சென்று திரும்பிப்பார்த்தான், குன்று நன்றாய்த் தென்படவில்லை. அதன்மீதிருந்த ஜனங்கள் சிற்றெறும்பு அளவாகத் தோற்றினர். "இந்தப் பக்கம் அதிகதூரம் நடந்துவிட்டோம். இனித் திரும்புவதற்கு நேரமாயிற்று. மேலும் உடம்பெல்லாம் வியர்க்கிறது; தாகமும் அதிகரிக்கிறது" என்று நினைத்து அவ்விடத்தில் ஒரு பெரிய பள்ளமாகவெட்டிச் சுற்றுப்பக்கமிருந்த புற்றரையை யெடுத்து அடையாளம் வைத்தான்.

தோளிலிருந்த தண்ணீர்ப் புட்டியை யெடுத்துச் சிறிது தாகசாந்தி செய்துகொண்டு மறுபடியும் புறப்பட்டுவிட்டான். வெயில் அதிகரித்தது. தேகத்தில் சிறிது இளைப்புத்தோன்றச் சூரியனை நோக்கினான். நடுப்பகலாய்விட்டதென உணர்ந்தான்.

அவ்விடத்திலேயே சிறிது ரொட்டியும் ஜலமும் சாப்பிட்டுவிட்டு, சற்று படுத்துச் சிரமபரிகாரம் செய்துகொண்டால் தூங்கிவிடுவோமோ என்று பயந்து படுக்காமலே சிறிது உட்கார்ந்திருந்து உடனே மறுபடியும் பிரயாணப்பட்டுவிட்டான்.

ஆரம்பத்தில் சிறிது ஊக்கமாய் நடந்தான். உட்கொண்ட ஆகாரம் சிறிது உத்ஸாஹமூட்டிப் பலம் கொடுத்தது. ஆனால் வெயில் அதிகமாய்க் காயவே சிறிது தூங்கவேண்டுமென்ற எண்ணம் உண்டாயிற்று "சே, என்ன தூக்கம். சற்றுச் சிரமம் பார்க்காமலிருந்தால் ஆயுள் முழுவதும் தனவந்தனாக வாழலாம்" என்று நினைத்து நிற்காமல் நடக்கலானான்.

அந்தத் திக்கிலும் அதிக தூரம் சென்றான். திரும்பலாமென்ற எண்ணம் உண்டாயிற்று. ஆனால் அப்போது அருகாமையில் ஜலம் தேங்கும் பள்ளத்தாக்கு ஒன்று கண்ணுக்குப் புலப்பட 'இங்கே சணல் நன்றாய்ப் பயிராகும்' என்று நினைத்து அந்தப் பள்ளத்தையும் சுற்றி அங்கே ஓர் அடையாளம் செய்துவிட்டுத் திரும்பினான். குன்றிலிருந்தவர்கள் கண்ணுக்குத் தென்படவில்லை. வெயில் அதிகரித்ததால் சரியாய்ப் பார்க்க முடியவில்லை.

"ஹா! கடந்த இரண்டு பக்கங்களும் சற்று அதிகமாய்விட்டன. ஆகையால் இப்போது செல்லும் பக்கத்தையாவது சிறிது குறுக்கவேண்டும்" என்று நினைத்து மூன்றாம் பக்கத்தில் சிறிது வேகமாய் நடந்தான். அந்தப் பக்கத்தில் இன்னும் இரண்டுமைல் கூட ஆகவில்லை. புறப்பட்டவிடஞ் சேர இன்னும் பத்துமைல் இருந்தது. சூரியனோ அடிவானத்துக்குப் பாதிதூரம் வந்துவிட்டான்.

"சரி, நாழிகையாயிற்று. நிலம், ஒருபக்கம் இரண்டு பக்கம் கோணலாயிருந்தால் பாதகமில்லை. நான் இப்போது நேராய்ப்போனால்தான் காலத்துக்குள் போய்ச் சேரலாம். போதும்; இப்போது ஆயிருப்பதே ஏராளமான விஸ்தீர்ணம்."என நினைத்துப் பரபரப்பாய் ஒரு குழியை வெட்டி அடையாளமிட்டுக் குன்றுநோக்கித் திரும்பினான்.

## 9

இப்பக்கம் அப்பக்கம் திரும்பிப் பார்க்கவில்லை. நேராக நடந்துவந்தான். ஆனால் நடைதளர்ந்துவிட்டது. பாதரக்ஷை யில்லாததால் கால்களில் காயம், முள் முதலியவற்றால் வருத்தம் ஏற்பட்டது. கால்களும் ஓய்ந்துவிட்டன. சற்று இளைப்பாறலாமென்று ஆசைப்பட்டான். இளைப்பாறஉட்கார்ந்தால் அஸ்தமனமாய்விடும்.

"ஐயோ! என்ன முட்டாள்தனம் செய்தோம். சற்று முன்னரே திரும்பி யிருந்தோமானால்......" என்று யோசிக்கலானான்.

குன்று வெகுதூர மிருந்தது. சூரியன் அடிவானத்தை நெருங்கிவிட்டான்.

பாஹோம் பேய்பிடித்தவன்போல் நடந்தான். நடை சாயவில்லை. இன்னும் வெகுதூரம் இருந்தது. சட்டை, பாதரக்ஷைகள், நீர்க்குவளை, குல்லா எல்லாவற்றையும் வீசி யெறிந்துவிட்டு மண்வெட்டி யொன்றை மாத்திரம் அங்கங்கே ஊன்றுகோலாக வைத்துக்கொண்டு ஓடிவரலானான்.

"ஐயோ நான் என்னசெய்வேன், அதிக ஆசைப்பட்டு அனைத்தையும் அவலமாக்கிக் கொண்டேனே. பொழுது சாய்வதற்குள் போய்ச்சேர முடியாது" என்ற பயம் ஏற்பட இன்னும் பலமற்றுப் போனான். உடம்பெல்லாம் வியர்த்தது; நா வறண்டது. மார்பு படபடவென்று அடிக்கலாயிற்று. பெருமூச்சு ஏற்பட்டது. கால்கள் நடுக்கங்கொண்டன. எங்கே மரணங்கூட நேரிடுமே என்று பயந்தான்.

மரணபயம் ஏற்பட்டும் "இவ்வளவு தூரம் வந்துவிட்டுக் கொஞ்சத்தில் அஞ்சிவிட்டால் எல்லோரும் ஏளனம் செய்வார்களோ" என்று நினைத்து நிற்காமல் ஓடிக்கொண்டேயிருந்தான். கிட்டேகிட்டே வரப் பாஷ்கீர்கள் ஆரவாரம்செய்து தன்னை உத்ஸாஹப்படுத்துவது அவன் செவிகளில் விழலாயிற்று. சிறிதூக்கம்பெற்று மனதைத் தைரியப்படுத்திக்கொண்டு நிற்காமல் ஓடிவந்தான்.

சூரியன் அடிவானத்துக்கருகே நல்ல ரக்தவர்ணத்துடன் பெரிய கோளமாகத் தோன்றினான். பாஹோமும் குன்றுக்கருகில் வந்துவிட்டான். அங்கிருந்தவர்கள் தன்னை உத்ஸாஹப்படுத்தி யழைப்பதைக் கண்டான். குல்லாவும் பணமும் தான் வைத்துவிட்டுப் போன இடத்திலேயே இருந்தன பாஷ்கீர்கள் தலைவர் விலா வெடித்துவிடும்போல் நகைத்துக்கொண்டு நின்றிருப்பதையும் பார்த்தான். கனவு நினைவுக்குவந்தது.

"ஏராளமான நிலம்! அபரிமிதமான விஸ்தீர்ணம்! ஆனால் ஈசுவரன் சம்மதம் எப்படியோ? என் பிராணன் பறக்கிறது? எனது வாழ்வு முடிந்தது. குன்றையான் அடையமாட்டேன்" என்று பாஹோம் பகலவனைப் பார்க்க அரைப்பாகம் அடிவானத்துள் மறைந்திருந்தது. தலையை முன்னால் தள்ளித் தன்னாலான வலிவுடன் ஓடினான்; குன்றையடைந்தான். அடிவானத்தை நோக்கினான். கதிரவனைக் காணோம். வீறிட்டான். 'விழலுக்கிறைத்த நீராயிற்றே' என்று ஏங்கினான். ஆனால் பாஷ்கீர்கள் இன்னும் தன்னை வரவுகூறி யழைப்பதைக் கண்டு "சரி, அவர்கள் குன்றின் உச்சியிலிருப்பதால் அவர்களுக்குச் சூரியன் இன்னும் தென்பட்டுக்கொண்டிருக்கிறதெனத் தெளிந்து கடைசியாய் ஒரு ஓட்டம் பிடித்து உச்சிக்குவந்தான். அவ்விடத்தில் வெளிச்சம் இன்னும் இருந்தது, குல்லா இருந்தது,பணமும் இருந்தது. பாஷ்கீர் தலைவர் தன் இரு கைகளாலும் தன் வயிற்றைப் பிடித்துக்கொண்டு நகைப்பதைக்கண்டான். கனவைநினைத்துக்கொண்டான். மறுபடியும் வீறிட்டான்; கால்கள் கீழே விழுந்தன; கைகள் குல்லாவைப் பற்றின.

"ஆஹா! மிகவும் சாமர்த்தியசாலி; நிறைய சம்பாதித்துவிட்டான்" என்றார் பாஷ்கீர்கள் தலைவர்.

வேலைக்காரன் ஓடிவந்து பாஹோமை எழுப்பி உட்காரவைக்கப் பார்த்தான். வாயிலிருந்து உதிரம் பெருகிக்கொண்டிருந்தது. பாஹோம் பிணமாய்க் கிடந்தான்.

பாஷ்கீர்கள் நாவை நொடித்து 'ஐயோபாவம்!' என்றனர். வேலைக்காரன் மண்வெட்டியை யெடுத்துக் குழிபறித்துப் பாஹோமை அடக்கஞ் செய்தான். எண்சாண் உடம்புக்கு........? (முற்றிற்று)



# மானத சாத்திரம்

## PSYCHOLOGY

### நரம்புகள்.

876வது பக்கத் தொடர்ச்சி.

தாமே இயங்கும் தசைநார்க்கூட்டம் என்றும், நம் முயற்சியால் இயங்கும் தசைநார்க் கூட்டம் என்றும், இருவகையான தசைநார்க் கூட்டங்கள் இருப்பதை முன்னரே கண்டோம். எலும்புகளின் அருகேயுள்ள தசைநார்களே எலும்புடன் கூடிய உறுப்புக்களை இயக்குகின்றன. இவையே நாம் எண்ணியபோது இயங்குவன (Voluntary muscles). இவை எலும்போடு புறத்தே காணப்படும். இதனால் இவை எலும்புத்தசைநார் (Skeletal muscles) என்றும் பெயர் பெறுகின்றன. இத்தசைநாரை இயக்கிவைக்கும் நரம்புகள் வெளிப்புறத்துத் தசைநார்களில் பதிந்துகிடப்பதால் புறநரம்புகள் எனத் தக்கவை. தாமே இயங்கும் நரம்புகளோ, உடலுக்குள்ளே கிடக்கும் குருதி யீரல், தீனிப்பை, குருதிக்குழைகள் (Blood vessels)ஊற்றுத் தசையுருளைகள் (Glands) முதலிய உறுப்புக்களில் உள்ள தசைநார்களை இயக்கிவைப்பனவாகும். ஆதலின் அவை அகநரம்புகள் (Visceral system) எனத் தக்கவை. புறநரம்புகள் உலகத்துப் புறப்பொருள்களால் தாக்குண்டு துலங்குகின்றன. அகநரம்புகளோ உள்ளுறுப்புகளது இயக்கத்தாலும் இயற்கையமைப்பின் மாறுபாடுகளாலும் தாக்குண்டு துலங்குகின்றன.

நடுவிட நரம்பமைப்பிலிருந்து(Central System) எலும்புத் தசைநார்களிடம் செல்லும் நரம்புவழியிலே நரம்புநார்கள் இடையீடின்றி ஒரே தொடர்ச்சியாக முதலிலிருந்து முடிவுவரை ஓடுகின்றன. ஆனால் தாமே யியங்கும் அகநரம்பு வழியிலோ நடுவிடத்திலிருந்து புறப்படும் நரம்புகள் நேராகத் தம் இயக்குவாய் வரையில் போய் முடிவதில்லை; கூடல்வாயில் (Synapses) போய் முடிகின்றன. பின்னர் அக்கூடல்வாயிகளிலிருந்து வேறொருவகையான நரம்புநார்கள் அக்கிளர்ச்சியை முடிவிடமான இயக்குவாய்க்குக் கொண்டுசெல்கின்றன. இவ்வாறு இயக்குவாய்வரை கொண்டுசெல்லும் நரப்பங்களின் கருவுடல்கள் (Cell-bodies) நரம்பு முடிச்சுகளில் (Ganglion) காணக்கிடக்கின்றன. ஆதலால், கூடல்வாய்வரை வந்த நரம்புகளை முன்முடிச்சு நரம்புகள்(Pre-ganglianic)என்றும், அங்கிருந்து இயக்குவாய்வரையில்போகும்நரம்புகளைப் பின்முடிச்சு நரம்புகள்(Post ganglionic) என்றும் வழங்கி வருகின்றோம். ஒவ்வொரு முன்முடிச்சு நரம்பும் பல பின்முடிச்சு நரம்புகளை அடக்கி யாள்கிறது. ஆகையால், முன்முடிச்சு நரம்பில் வரும் கிளர்ச்சி ஒருவாய்ப்பட்டுத் திரண்டு ஓடாமல், பல வாயிலும் ஓடிச் சுற்றுமுற்றிலும் பரவிவிடுகின்றது. ஆனால் தாமாக இயங்காத எலும்புத் தசைநார்களில் வந்து முடியும் புறநரம்புகளோ வேறுவகையில் அமைந்து கிடக்கின்றன. அவற்றில் ஓடும் கிளர்ச்சியோ, ஒருவாய்ப்பட்டுத் திரண்டோடிவந்து குறித்த இடத்தில் முடிகின்றது. இவ்வாறு ஒருவாய்ப்பட்டு உரத்தோடும் ஓடிவருவதால் கைகால் முதலியவற்றை மடக்குதல் நீட்டுதல் முதலிய ஆற்றல் நிறைந்த செயல்கள் நிகழ்கின்றன. இத்தகைய ஆற்றலானது தாமே யியங்கும் அகநரம்புகளுக்கு வேண்டுவதில்லையாதலின், அவற்றின் கிளர்ச்சி ஓடிப் பரவிவிடுகிறது.

அகநரம் பமைப்பை மூன்றாகப் பிரிக்கலாம். தலை அகநரம்புகள் முதற்பிரிவைச் சேர்ந்தவை. இங்கிருந்து வெளிவரும் நரம்புகள் தலையிலும் நள்ளுடலிலும் (Trunk) இருக்கும் பல உறுப்புக்களை அடக்கியாள்கின்றன. கண்ணிலுள்ள பாவையை (Pupils) சுருக்குவதும் இத் தலையகநரம்பே எச்சிலூறுவதும் இதனாலேயே. இதனால்தான் குருதியீரல்சிலபொழுது குறைவாகத் துடிக்கின்றது. குரல்வளையைக் குறுக்குவதும் வயிற்றுப்புளிப்பை (Gastric juice)ஊறச்செய்வதும்,உணவுக்குழையி (Alimentary canal)லுள்ள தசைநார்களை இயக்குவதும் இத்தலையக நரம்புகளேயாம். மார்பும் வயிறும் சேர்ந்தாகிய நள்ளுடலில் எழும் நள்ளுடல்அகநரம்புகள் இரண்டாம் பிரிவாகும். முதுகுநரம்புக் குழையினது அடியிடம் ஒழிந்த மற்றைய இடத்திலிருந்தே இவை வருகின்றன. குருதிக் குழைகளைக் குறுக்குவதும் உணவுக் குழையின் இயக்கத்தை நிறுத்துவதும், வேர்க்கச் செய்வதும், மயிர்க்கூச் செறியச் செய்வதும்; கண்ணிலுள்ள பாவையை அகலச்செய்வதும் இப்பிரிவைச் சேர்ந்த நள்ளுடல் அகநரம்புகளின் செயல்களாகும். குருதியீரலை விரைந்து துடிக்கச்செய்வதும் இந்த நரம்புகளே. குருதியீரலின் துடிப்பை முதற்பிரிவு நரம்புகள் அடக்குகின்றன, இரண்டாம் பிரிவு நரம்புகள் மிகுதிப்படுத்துகின்றன; கண்ணிலுள்ள பாவையைத் தலையகநரம்புகள் சுருக்கிவைக்க, நள்ளுடல் அகநரம்புகள் அகலப்படுத்துகின்றன. உணவுக்குழையினை முன்னவை இயக்கிவைக்கப் பின்னவை தடைசெய்கின்றன. இந்த வகையில் எல்லாம், தலையகநரம்புகளின் செயல்கள் நள்ளுடல் அகநரம்புகளின் செயல்களுக்கு மறுதலையாக விளங்குதல் காண்க. மூன்றாம் பிரிவினைச் சேர்ந்தவை முதுகு நரம்புக் குழையின் அடியிலிருந்து புறப்பட்டு வருபவையாகும். இவை இடையக நரம்புகளாம். இவை, கருவிடுவாயில் எருவிடுவாயில் சிறுநீர்ப் பை, முதலியவற்றை அடக்கி யாள்கின்றன. இவ்வாறு முதல் நிலைப்பிரிவாகவும், இடைநிலைப் பிரிவாகவும், அடிநிலைப்பிரிவாகவும் அகநரம்புகள் பிரிந்தியங்குகின்றன.

நடுவிட நரம்பமைப்பின் பலஉறுப்பின் செயல்களை அறியப் பலவகை ஆராய்ச்சி செய்கின்றனர். தற்செயலாகவோ நோயாலேயோ, வேறுவகையாலேயோ நரம்புகள் நைந்து போகின்றன. இவ்வாறு குறித்த பெருநரம்பு நைந்துபோவதற்குமுன் அந்த உயிருளி எந்தஎந்தச் செயல்களைச் செய்து வந்ததோ அந்தச் செயல்களில் ஒருசிலவற்றை நைந்துபோனதற்குப் பின் செய்யமுடிவதில்லை. இதிலிருந்தும் நைந்துபோன நரம்பே, மறைந்துபோன செயலை ஆள்வதென முடிவுகட்டலாம் அன்றோ? நரம்பமைப்பினால் இன்றியமையாததாய் இருப்பது புகுவாய் இயக்குவாய்த் தொடரேயாம். உலகத்துப் பொருள் புகுவாய் வழியாகத் தாக்கியபொழுது, அதற்குத் தக ஒரு யிருளி இயக்குவாய் வழியாக இயங்கித் தன் நிலையை காத்துக் கொள்கிறது. நமது கண்ணில் குத்த ஒருவன் வருகிறான்; உடனே நமது கண்ணிமைகள் மூடிக்கொள்கின்றன. புகுவாயும் இயக்குவாயும் இவ்வாறு நேரேதொடர்ந்து நிற்கும் நரம்புத்தொடர்ச்சியே கீழ்நிலையில்உள்ள உயிர்களிடைக் காணக்கிடக்கிறது. இந் நரம்புத்தொடர்களைக் கீழ்நிலைநரம்புத்தொடர் எனலாம். இவைகள் முதுகு நரம்புக்குழையைப் பற்றியனவாக இருக்கின்றன. இத்தொடர்கள்,மக்கள் பிறக்கும்போதே முற்றியநிலையில் காணப்படுகின்றன. இடைநிலை நரம்புத்தொடர்கள் இதற்குமேல் இருக்கின்றன. கீழ்நிலை நரம்புத்தொடர்கள் பலவன்றோ இருக்கின்றன? அந்தத்தொடர்கள் ஒன்றோடொன்று

தொடர்புபட்டு விளங்குவதால் அன்றோ நம்முடைய செயல்கள் ஒன்றோடொன்று இயைபுடையனவாக விளங்குகின்றன. கீழ்நிலை நரம்புத்தொடர்களை (Sensori-motor arcs of the Spinal level.) ஒன்றோடொன்று கூட்டும் நரம்புத்தொடர்ச்சிகளே இடைநிலை நரம்புத்தொடர் எனப் பெயர்பெறுகின்றன (Arcs of the intermediate level). இவையும் மக்கள் பிறக்கும்பொழுதே முற்றியவையாய் விளங்குகின்றன. இவ்வாறே இடைநிலை நரம்புத்தொடர்களை ஒன்றோடொன்று இணைக்கும் நரம்புத்தொடர்ச்சிகள் மேனிலை நரம்புத்தொடர்எனப் பெயர்பெறுகின்றன. (Arcs of the higher level). இவை இரண்டும் மூளையில் இருக்கின்றன. மேனிலை நரம்புத்தொடர்களோ மக்கள் பிறந்தபின்னர், ஏற்பட்டு, பல்கிப் பெருகி வளர்ந்துகொண்டு போகின்றன.

மேலும் சிறிதுசென்று, நடுவிட நரம்பமைப்பின் பல உறுப்புக்களை ஆராய்ந்தவர்கள் கண்ட உண்மைகளும் இங்குக் குறித்து வைத்துக்கொள்ளத் தக்கன. தவளையின் மூளை முதலியவற்றைத்தான் பலரும் ஆராய்ந்துள்ளார்கள். ஒரு தவளையின் மூளையை அறுத்து எடுத்து அதன் செயலைச் செய்க்காட்சியால் (Experiment) காண்கின்றனர். இவ்வூறுபட்ட தவளைக்கு முதுகு நரம்புக்குழை (Spinal Cord) ஒன்றே உண்டு; மிக எளிதான சில மடக்குச் செயல்களையே (Reflex action)இத்தகைய தவளை செய்தல் கூடும். இத்தவளையானது குப்புற வயிற்றின்மேல் வீழ்ந்துகிடக்கின்றது. ஊறுபடாததவளையைப்போல இது பின்னங்காலை மடக்கிக்கொள்கிறது. ஆனால்,தலையையும், நடுவுடலையும், தாங்கிக்கொண்டு முன்னங்கால்மேல் நிமிர்ந்து நிற்கிறதில்லை. மூச்சுவிடு மியக்கமில்லை; சிக்கலான பல மடக்குச்செயல்களையும்இந்தத் தவளை செய்கிறதில்லை. இதனுடைய காலொன்றைப் பின்னுக்கு மெல்ல இழுத்தால், மறுபடியும், அதனை முன்னிருந்தபடியே மடித்து வைத்துக்கொள்கிறது. அதனுடைய காலிலிருக்கும் தோலின்மேல் புளிப்பு (acid) ஊறியதுணியைவைத்தால் அதனைஉதைத்துத் தள்ளுகிறது. இச்செயல்களனைத்தும் வெளியுலகத் தாக்கலின்நின்றும் தன்னைத் தப்புவித்துக் கொள்ளும் கருத்துடையவனாகக் காணப்படுகின்றன. அன்றியும் இதன் செயல்கள் ஒன்றோடொன்று இயைபுடையனவாகவும் (Co-ordinated actions) விளங்குகின்றன. இதனைக் காண்கின்றவர்கள், இத் தவளையானது, உலகத்தூண்டலை (Stimulus) அறிந்து அதற்குத்தக்க எதிர்தலைச் செயலை எண்ணிப்பார்த்துப் பின்னர் இயற்றுகின்றதென முடிவு கட்டுவர். ஒரு உயிருளியின்செயல்கள் குறித்த ஒருமுடிவினைக் குறிப்பனவாகவும் (Purposive) இயைபுடையனவாகவும் விளங்குகின்றமையாலேயே, அச்செயல்கள் அறிவுடைய செயல்கள் என முடிவுகட்ட முடியாது. மூச்சுவிடுதல், தும்மல் இருமல் என்றவை எல்லாம் ஒரு முடிவினைக் குறிப்பனவாயும் இயைபுடையனவாகவும் இருந்தாலும் நனவுநிலை யில்லாத போதும் நிகழ்கின்றன அன்றோ? ஆகவே, மூளையினுதவியின்றி முதுகு நரம்புக்குழை ஒன்றே இத்தகைய தவளையை ஓய்வுநிலையில் குந்தி நிற்கச் செய்கிறது. பின்னங்காலைப் பற்றிய சிலமடக்குகளைச் செய்விக்கின்றது ஆனால் இந்த மடக்குச் செயல்கள் ஒழிந்த மற்றையவற்றை இத்தவளை செய்ய முடியாது.

மற்றொரு தவளையின் நடு மூளையையும் முன்தலை மூளையையும் அறுத்து எடுத்து விடுகின்றனர்.முதுகு நரம்புக் குழையும் பிடரிமூளையும் (Medulla Oblongata) குறைபடாமல் இருக்கின்றன மூளை முழுதும் இழந்ததவளையைப்போலவே இந்தத் தவளையும் வயிற்றின்மேல் விழுந்து கிடக்கிறது. மேல்விழுந்து செயல்களைப் புரிகின்றது. ஆனால் இது மூச்சு விடுகின்றது. இங்கே குருதிசரலின் துடிப்பைத் தடுக்க முடிகின்றது. குருதிக்குழைத் தசைநார்களினியக்கம் நல்ல நிலையில் இருப்பதால் அவற்றைப் பொறுத்து மடக்குச் செயல்கள் செவ்வனே நிகழ்கின்றன. மூளை முழுதும் இழந்த தவளை செய்யும் செயல்களைவிட இந்தத் தவளை செய்யும் செயல்கள் எண்ணிக்கையில் மிகுதிப்படுகின்றன ; செய்யும் மடக்குச் செயல்களும் மிகச் சிக்கலானவை.

வேறொரு தவளையின் முன்தலை மூளையை மட்டும் எடுத்துவிட்டு அதன் செயல்களை ஆராய்கின்றனர். நடுமூளையும் (Mid brain) பிடரிமூளையும் (Medulla oblongata) முதுகு நரப்புக் குழையும் நல்ல நிலையில் இருக்கின்றன. இத்தவளை முன்னையவற்றைப் போல வயிற்றின்மேல் குப்புற விழுந்துகிடக்கவில்லை. நல்ல நிலையில் உள்ள தவளையைப்போல நிமிர்ந்து நிற்கிறது. எனவே, நேரே நிமிர்ந்து நிற்பதற்கு நடுமூளை (Cere brum) வேண்டும் என்பது விளங்குகிறது. ஒரு மரத் துண்டின்மேல் இத்தவளையை வைத்து இது பின்புறமாகக் கீழே நழுவுமாறு சிறுக அத்துண்டினைச் சுற்றினால், இது உடனே நகர்ந்து மேலேறி நிலை பிறழாமல் நிற்கிறது. நேர்நிமிர்ந்து நிற்பதோடு நிலை பிறழும்போது அதற்குத்தப்பி நிலைபிறழாமல் நிற்பதற்கும் நடுமூளை இன்றியமையாதது என்பதாயிற்று. இத்தவளையின் வயிற்றின்மேல் மெல்லத் தட்டினால் இது கத்துகிறது, நுனி மழுங்கிய ஓர் ஊசியால் இதன் உதட்டைத் தொட்டால், அவ்வூசியைத் தன் முன்னங்காலால் உதைத்துத் தள்ளுகிறது. இதனைத் தண்ணீரில் எறிந்தால் நீந்தக் காண்கிறோம். கட்டிப் பொருள் தட்டுப்பட்டால் அதன் மேல் நகர்ந்து சென்று ஓய்ந்து குந்துகிறது. எந்தத் தொழிலையேனும் இத்தவளை செய்கிறது. ஆனால் அச்செயல்களை எழுப்பி வைக்கும் புறத்தூண்டல் இல்லாதபோது எச்செயலையும் செய்வதில்லை, தானே எண்ணி எதனையும் செய்வதில்லை. தண்ணீர் பட்டால் நீந்துகிறது; கட்டிப் பொருள் தட்டுப்பட்டால் குந்துகிறது. இந்த நிலையில் உள்ள தவளையைப் புறத்தூண்டல்களாகிய வெளியுலகத் தாக்கல்களே இயக்குகின்றன. நிலையில் நிற்பதற்கும், நிலைபிறழ்ச்சியைத் திருத்துவதற்கும், இடம் பெயர்வதற்கும் நடுமூளை, பிடரிமூளை, முதுகு நரப்பக்குழை என்ற இவை இன்றியமையாதனவாம்.

முன்தலைமூளை யில்லாத தவளைக்கும் ஊறுபாடிலாத தவளைக்கும் இரண்டு வேற்றுமை யுள்ளன. வெளியிலிருந்து தாக்கல் நிகழ்ந்தாலன்றி மூளையில்லாத தவளை ஒரு தொழிலும் செய்வதில்லை என்பது ஒன்று. அதனுடைய உடலை உலர்ந்து போகாதபடி செய்துவிடுவோமானால் எத்தனை நாளானாலும், இருந்த விடத்தை விட்டு அசையாது இருந்தபடியே இருக்கும். நனவு நிலையில் உள்ள ஊறுபாடிலாத தவளை இங்ஙனம் இருக்க முடியுமா? தன்னைச்சுற்றிலும் 'என்ன நடக்கின்றது' என அறிந்து அதற்குத் தகஇயங்குமன்றோ? மற்றொரு வேற்றுமையும்உண்டு. முன்தலை மூளையில்லாத தவளையின் உதட்டை ஊசியால் பலநூறுமுறை தொட்டாலும், முதன் முறை எந்தக்காலால், எந்தப்படி உதைத்துத் தள்ளியதோ அந்தக்காலாலே அந்தப்படியே நூறுமுறையும் உதைத்துத் தள்ளுகிறது. ஒருவகைத் தூண்டலால் ஒரு முறை தாக்கப்பட்டால் எந்த வகையாக எதிர்தலைச் செயலை (Response) செய்கின்றதோ அந்த வகையாகத்தான் பல நூறுமுறை தாக்கப்பட்டாலும் செய்துகொண்டேயிருக்கிறது. ஆனால் ஊறுபாடிலாத தவளை இங்ஙனம் இராதன்றோ? ஊறுபடாத் தவளையை ஊசியால் தொட்டால் அதுவும் முதலில் உதைத்துத் தள்ளுகிறது. அதனை மறுபடியும் மறுபடியும் தொட்டுக்கொண்டிருந்தால் உதைத்துத் தள்ளுவது பயனில்லை என அறிகிறது; குதித்தோடித் தப்பிப்போ



கிறது. ஒருவகையான எதிரூன்றல் (Response) பயன்படாதபோது வேறுவகையான எதிரூன்றலை நிகழ்த்துகின்றது. ஒரு பொறியினை (Machine) ஒரு தடவை சுற்றினால் எவ்வாறு இயங்குகின்றதோ அவ்வாறே பலதடவை சுற்றினாலும் இயங்குகின்றது. முன்தலைமூளை யில்லாத உயிருளிகள் இந்தப் பொருள்களைப் போலவே தொழில் புரிகின்றன.

முன்தலைமூளையின் ஒவ்வொருபிரிவும் ஒவ்வொரு உடலுறுப்பினை அடக்கி ஆள்கிறது. ஆனால், ஒவ்வொரு பிரிவும் மற்றைய பிரிவுகளோடு பெரிதும் தொடர்புடையதாகும். ஒருபிரிவு நைந்தால் பலபிரிவுகள் கேடுறுகின்றன. விலங்குகளின் மண்டையோட்டை எடுத்துவிட்டுச் சில பிரிவுகளில்மேல் மின்னாற்றலை (Electricity) ஓடவிட்டபோது சில தசைநார்கள் இயங்கக் கண்டனர். அப்பிரிவுகள்தான் தசைநார்களை இயக்குவன என முடிவுகட்டினர்; அப்பிரிவுகளை முன்தலை மூளையின் இயக்க எல்லை என (Motar areas) வழங்கலாயினர். நமது முன்தலை மூளையின் குறுக்காக ஒரு மடிப்பு இருக்கின்றது. ஈதே நடுமடிப்பு (Central sulci) எனப்பெறும். இதற்கு முன்னாக இருக்கும் பிரிவே இயக்க எல்லையாம். கழுத்தையும் தலையையும் இயக்கிவைப்பது இவ்வெல்லையின் அடிப்புறமாகும்; கையையும் நடு உடலையும் இயக்கிவைப்பது இதன் நடுப்புறமாகும்; காலை யியக்குவது இதன் மேற்புறமாகும்.

இந்த நடுமடிப்பிற்குப் பின்னே இருக்கும் பிரிவே புலன் எல்லையாம் (Sensatori area). சூடு, குளிர்ச்சி, அழுத்தம், உடலியக்கம் முதலியவற்றைப் புலனுறுவது, இவ்வெல்லை நல்ல நிலையில் இருந்தால்தான் இயலும். கட்புலன் எல்லையானதுகண்ணின்பின்புறத்தே கிடக்கும் முன்தலைமூளையின் ஒருபிரிவேயாகும். காதுக்கருகே யிருக்கும் முன்தலை மூளைப்பிரிவே செவிப்புலன்எல்லையாம். முன்தலைமூளையின் இரண்டு வட்டப் பிளவுகளும் அடிப்புறத்தில் ஒற்றிக்கிடக்கின்றன அன்றோ? இவ்வாறு ஒற்றிக்கிடக்கும் இடத்தைச் சுற்றியுள்ள பிரிவே, நாப்புலன் எல்லையாம், அங்குத்தான் மூக்குப்புலன் எல்லையும் இருப்பதாக எண்ணுகின்றனர் ஆராய்ச்சிவாணர் தனித்தனியாகப் பதிந்த பலவகைப் புலன்களை (Sensations) எல்லாம் ஒன்றோடொன்று இயைவித்து ஒருணர்வாகவும் (Perception) கருத்தாகவும் தொடர்பு படுத்துகின்ற இணைக்கு மெல்லையும் (Association) முன்தலை மூளையில் இருக்கிறது. இவ்வெல்லையே உயர்நிலையைக் குறிப்பதாகும்.இவ்வெல்லையே நெற்றியிடத்திருப்பதாகும். பித்தம் பிடித்தலைவோர்க்கு இப்பிரிவுதான் நைந்து போயிருக்கின்றது.

நரப்பங்கள் படைப்படையாக இருக்கின்றன. வெண்மையாய் இருக்கும் நரப்பங்கள் நாளடைவில் சிறுகச்சிறுகக் கொழுப்புப்போர்வை போர்த்துப் பருத்து வளர்கின்றன. முன்தலை மூளையில் ஐந்து படைகள் ஒன்றின்பின் ஒன்றாக வளர்ந்து ஒன்றின் மே லொன்றாக இருக்கக் காண்கிறோம்.

முதனிலைப் படையானது இணைக்கும் எல்லையில் மிகுதியாகக் காணப்படுகிறது. இம் முதனிலைப்படையானது எண்ணங்களை இணைத்துத் தொடர்புபடுத்துதற்கு இன்றியமையாததாம். இடைநிலைப்படையானது புலனெல்லையில் மிகுதியாகக் காணப்படுகிறது. ஆதலின் புலனுறுதற்கு இப்படை நரப்பங்கள் இன்றியமையாதனவாம் என்க. இவற்றிற்கும் கீழே உள்ள அடிநிலைப் படையானது இயக்க எல்லையில் காணப்படுகின்றத; ஆதலின் இந்நரப்பங்கள் இயக்கத்திற்கு இன்றியமையாதனவாம், கீழ்நிலையில் உள்ள உயிருளிகளிடம் ஈதே இன்றியமையாததாய் விளங்குகிறது. உயிருளிகள் உயர்நிலையை அடைய அடைய மேலே புதிய படைகள் வளர்ந்துகொண்டே வருகின்றன.

# மலர்வனம்.

## காதன் மாதவி

977வது பக்கத் தொடர்ச்சி.

நெடிதுநா ளின்ப முடனொக்க வுண்டுவந்த பின்னரும் காதலார், முதன்முத லொருவரையொருவர் காட்சியுற்றுத் தம்முள் பொதுநோக்கு மெதிர்நோக்கு மினிதெறிந்து கண்களவாடிய வத்தனிப் பெருஞ் செவ்விவாய்ந்த திருநாளை நினைக்குந்தோறும் நினைக்குந்தோறும் உள்ளத்தடங்காது பொங்கி யோங்குமோ ருவகைய ராவார். அன்னதோர் நினைவு தூண்டலால் இயங்கு சித்திரம் ஈதென உன்னியுன்னி மாதவி நையுமாறு கோவலன் பாட லொருமூன்று பாடுகின்றான்:—

பவள வுலக்கை கையாற் பற்றித்
தவள முத்தங் குறுவாள் செங்கண்
தவள முத்தங் குறுவாள் செங்கண்
குவளை யல்ல கொடிய கொடிய.

[பவளத்தாலாகிய உலக்கையைத் தன் கையில்கொண்டு (வாசனைச்சுண்ணம் இடிப்பானாய்) வெண்மையான முத்துக்களைக் குற்றுகின்ற இவளது செங்கண்—நிறத்தால் குவளைபோல் தோன்றினும்—குவளையல்ல;மிகவுங் கொடிய கொடிய]

இது, தன் முன்றிலிலமர்ந்து நித்திலச்சுண்ணம் இடித்திருந்தா ளொருத்தியை நோக்கிநின்ற விடையனான் வியந்துரைத்த வாசகம்போலும்.கொடியவேனும் அகன்றிடாது, அக்கண்களுக்குத் தான் இலக்காம் வண்ணம் அச்சூழலிலே தயங்கித்தயங்கி யவன் திரிந்திருத்தல் வேண்டும். ஏனெனில், பிறகு அவள் புன்னைப்பொதும்பர் நண்ணுவா ளாயபோதும் அவளைத் தொடர்ந்து சென்றனான். அங்கு,

புன்னை நீழற் புலவுத் திரைவா
யன்ன நடப்ப நடப்பாள் செங்கண்
அன்ன நடப்ப நடப்பாள் செங்கண்
கொன்னே வெய்ய கூற்றங் கூற்றம்.

[புன்னை நிழலில், புலால்முடை வீசும் அலையின்கண், அன்னம் நடைதோற்றுப் போகும்படி நடக்கின்ற இவளது சிவந்த கண்கள் மிகவுங் கொடிய எமனே எமனே, ஆகும்.]

என்று மேன்மே லஞ்சினானேனு மகன்றிலன்.எய்திய அவளோ தனக்குரிய தொழிலிலமர்ந்தனள்; இவனும் அவளது எதிர்நோக் கெய்தும்வண்ணம் அவ்விடத்திலேயே சுற்றித்திரிருந் ததனைப் பெற்றனன் பெற்று,

கள்வாய் நீலங் கையி னேந்திப்
புள்வா யுணங்கல் கடிவாள் செங்கண்
புள்வா யுணங்கல் கடிவாள் செங்கண்
வெள்வே லல்ல வெய்ய வெய்ய.

[தேன்பொருந்திய குவளைமலரைக் கையில் ஏந்திப் பறவைகள் மீன்வற்றலைக் கவராமல் ஓட்டிக்கொண்டிருக்கின்ற இவளது சிவந்த கண்கள், வெண்மையான வேல் போன்றிருப்பினும் வேல்கள் அல்ல; வேலினும் இவை மிகக் கொடியன, கொடியன.]

எனத் தனக்குத் துன்பம்செய்யுமச் செங்கண்களின் பார்வையால் இடர்சில நேர்ந்தவா றெடுத்தியம்பினான்.

கோவலன் பாடிய இவை மாதவியின் செவியுள் சுடச்சுடப் பாய்ந்தன. அவ்வியமொன்றும் புகுந்திராதேல் இப்பாடல்களின் இனிமையால் அகங்குழைந்து காதலன் மார்பில் தன் சிரத்தினைச் சேரவைத்து மெய்யும் மனமும் மறந்து, ஒரு நாளுந் துய்த்திரா உயரியதோ ரின்பத்தைத் துய்த்திருப்பாள் மாதவி. விதியோ வேறு யிருந்தது. இவளுற்ற வொரு ஐயம் அன்பையே அனலாக் கனற்றியது. இவ்வழலிற்கிடையே, இதற்கெதிர் தானென் வகுப்பதெனத் தேரும் சிந்தையே கொண்டிருந்தனள். தலைவியைத் தொடர்ந்தவோர் தலைவன் செய்தியைக் கோவலன் செப்பினன் எனின், வந்தகன்ற தலைவனது நினைவின் திறத்தைப் பாராட்டிப் பாடுமொரு பெண்ணின் மொழிகளால் தன்னிலை தெரியச் சாற்றுகின்றாள் :—

கைதை வேலிக் கழிவாய் வந்தெம்
பொய்த லழித்துப் போனா ரொருவர்
பொய்த லழித்துப் போனா ரவர்நம்
மையன் மனம்விட் டகல்வா ரல்லர்.

[தாழையை வேலியாகவுடைய கழியினிடம் வந்து, நாம் ஆடியிருந்த விளையாட்டுச் சிதையும்படி நமது கருத்தைக் கவர்ந்து சென்றார் ஒருவர்—அவர் நமது மையலுடைய மனம்விட்டு ஒருபோதும் அகலமாட்டார்]

கானல் வேலிக் கழிவாய் வந்து
நீநல் கென்றே நின்றா ரொருவர்
நீநல் கென்றே நின்றா ரவர்நம்
மானேர் நோக்க மறப்பா ரல்லர்.

[கானலை வேலியாக உடைய கழியினிடத்தில் வந்து, "நீ எனக்கு அருள் செய்யக் கடவாய்" என்று வேண்டி நின்றா ரொருவர்—அவ்வாறு நின்ற அவரும் மான்போன்ற எமது பார்வையை ஒருபோதும் மறக்க மாட்டார்]

அன்னந் துணையோ டாடக் கண்டு
நென்ன லேக்கி நின்றா ரொருவர்
நென்ன லேக்கி நின்றா ரவர்நம்
பொன்னேர் சுணங்கிற் போவா ரல்லர்.

[அன்னம் தன் துணையோடு ஆடுவதைப் பார்ப்பார்போல் பாவனைசெய்து நேற்று நம்மை நோக்கியவண்ணமாய் நின்றா ரொருவர், அவர் நமது முலைகளில் இன்று தோன்றி நாளை மறைந்துபோய்விடும் பொன்போன்ற அழகிய தேமல் களைப்போல் போய்விடமாட்டார்]

பிரிவால் வருந்தும் தன் தலைவியை ஆற்றுவித்தல் பொருட்டுத் தலைவனது இயற்பழித்த தோழியினது உரையை மறுத்து, இயற்பட மொழியுந் தலைவியின் தன்மையைக் கூறி அகத்துறையைப் பொதுவகையில் இப்பாடல்களால் அளிகின்றாள் மாதவி யென்பதைக் கோவலன் அறவே மறந்து, தானே குறிக்கொண்ட வங்கணனைப் பாராட்டி வாடுவதைத் தெரிவிக்கின்றாளிவளெனத் தவித்தான்.

கோவலன் பாடிய இறுதிப்பாடலே மதிப்புண்ட மாதவியின் மனத்தை மட்டிலாது திரித்திருத்தல் வேண்டும். பாடினனவன் :—

சொன்மட வன்னஞ் சொன்னடை யொவ்வாய்
சொன்மட வன்னஞ் சொன்னடை யொவ்வாய்
ஊர்திரைநீர் வேலி யுழக்கித் திரிவாள்பின்
சென்மட வன்னஞ் சொன்னடை யொவ்வாய்.

[மட அன்னமே, உன்னுடைய நடைபோன்றது மாதர் நடையெனப் புலவரால் உரைக்கப்படினும், இவளது நடைக்கு நீ நிகராகமாட்டாய் என்பதை ஒப்புக்கொள். ஒப்புக்கொண்டு, பாய்கின்ற அலைகளையுடைய இந் நெய்தல்நிலத்தில் கண்டோர் உயிரை வருத்தித் திரிகின்ற அவளுக்குப் பின் சென்றேனும் நடை கற்றுக்கொள் — அல்லாக்கால் அவள்நடையை ஒவ்வாய் நீ]

இது, காமத்தின் தன்மை யுணரஇயலா இளமையுடையவள்பால் காமங்கொண்ட தலைவன் அவளோடு உரைவளர்க்க விரும்பிப் புகழ்படநவின்ற துறையதாயினும், தன்னைத்தான் அவளுக்கு லவ்வாதவள் என்று இழித்துக் கூறுகின்றானெனக் கொண்டனள் போலும் மாதவி. அவ்வாறே இதற்கெதிர்,

அடையல் குருகே யடையலெங் கானல்
அடையல் குருகே யடையலெங் கானல்
உடைதிரைநீர்ச் சேர்ப்பற் குறுநோ யுரையாய்
அடையல் குருகே யடையலெங் கானல்.

[குருகே, எங்கள் கடற்கரைச் சோலையில்வந்து சேராதே போய்விடு. உடைகின்ற அலைகளையுடைய இந்த நெய்தல் நிலத் தலைவனுக்கு என்னுடைய வருத்தத்தைச் சென்று சொல்லா திருக்கின்றாய்—ஆகையால் எம் கானலின்கண் வாராதே]

என்று அவள் பாடியபோதும், இப்புன்மகள் தன்னையே விலக்குகின்றாள் என்று கோவலனும் குறிப்புக் கண்டனன்.

கானல்வரி தான் பாட, "இம்மாயப்பொய் பல கூட்டு மாயத்தாள் ஒன்றின்மேல் மனம்வைத்துப் பாடினாள்" எனக் கோவலன் துணியும்வண்ணம் நடித்ததவ்வளவும் பொல்லா வினையால் புரிந்ததொரு மாயப்பொய்யேயாதலால் ஓராது அவன் உண்மையே எண்ணினன். குவவுக்கை நெகிழா முன்னரே அவன் மனம் நெகிழ்ந்ததென்பதை முகத்தாலறிந்த மாதவி, அவனது பாடல்களுக் கெதிரெதிர் பாடியாய பின்னரும், தன்னிலை நினைத்துத் தாங்கொணாத் துயரக்கிளவியால், மாய்வதே மேலென மாழ்கிப் பின்னும் சில பன்னி அன்னம்போல் ஒய்வதானாள்:—

நுளையர் விளரி நொடிதருந் தீம் பாலை
யிளிகிளையிற் கொள்ள விறுத்தாயான் மாலை
யிளிகிளையிற் கொள்ள விறுத்தாய்மன் னீயேற்
கொளவல்லா யென்னுவி கொள்வாழி மாலை.

[நெய்தல் நிலமாக்கள் பாடுகின்ற இனிய விளரிப்பாலை என்னும் பண்ணினை நான் பாடப்புகுங்கால், இளி என்னும் நரம்பு கிளையென்னும் அதன் பகைநரம்போடு சேர்ந்து எனது யாழ் பண்ணடைவின்றி இசைக்கும்படி எனக்குத் தளர்ச்சியை உண்டாக்கி யிருக்கிற மாலைப்பொழுதே, யானே இவ்விதம் பண்பிறழும்படி செய்தது நீயென்றால், என்னுடைய ஆவியையும் நீ கொள்ளவல்லாய் என்பதற்கையமில்லை; ஆதலின்எனது ஆவியைக் கொண்டு, மாலைப்பொழுதே, அவ்வுதவி புரிந்ததற்காக நெடுங்காலம் வாழ்வாயாக]

பிரிந்தார் பரிந்துரைத்த பேரருளி னீழ
லிருந்தேங்கி வாழ்வா ருயிர்ப்புறத்தாய் மாலை
யுயிர்ப்புறத்தாய் நீயாகி லுள்ளாற்றா வேந்த
னெயிற்புறத்து வேந்தனோ டென்னாதி மாலை.

[என்னைப்பிரிந்து போனவர், போகுமுன் அன்போடு பேசிய பெரிய அருளை நினைத்துநினைத்துத் தனிமையில் வருந்தும் எனது உயிரைக் கவர்வதற்கு வந்து சூழ்ந்து கொள்கின்றாய், மாலைப்பொழுதே! அவ்வாறு சூழ்ந்து கொள்வாயாயின், ஏற்கனவே எனது உயிரைக் கவர முற்றுகையிட்டு நிற்கின்ற இவனுக்கு நீயும் துணைபுரிய நினைக்கும்படி உனக்கும் அவனுக்கும் என்ன உறவு உளது?]

பையுணோய் கூரப் பகல்செய்வான் போய்வீழ
வையமோ கண்புதைப்ப வந்தாய் மருண்மாலை
மாலைநீ யாயின் மணந்தா ரவராயின்
ஞாலமோ நல்கூர்ந் ததுவாழி மாலை.

[எனது மனத்தொளி யாகிய சூரியன் மறையவே, இவ்வுலகமெங்கும் இருள்சூழவும், நான் துன்பநோய் அடையவும், மருட்சிக்கிடமான மாலைப்பொழுதே நீ வந்தாய்! அவ்வாறு வந்த மாலையும் நீயாக, என்னை மணந்தவரும் பிரிந்தாராக, இவ்விதம் எனக்கு இன்பம் நல்கலாகாதென்று உலகமே உலோபம் செய்து என்னை வீணுக்க வேண்டுமோ—மாலையே, நீ வாழ்வாயாக]

என இவ்விதம் வாழ்நாள் வெறுப்புற்றுப் பண்ணடைவின்றிச் சென்ற தன்னுயிர் தரிக்கலாற்றா மாத்துயருழந்த மாதவி, மாலைகண் டிரங்குவாள்போல் மாயம்



சிறிதுமின்றி அழுதனள் பாவம். பெண்வழி நலனெலாம் பெற்று, நுண்ணருங் கலையெலாங் கற்று, உயிரினிப்பிறி தில்லையெனக் கோவலனைக் காதலித்திருந்த மாதவி, தன்னை யவன் கைவிட்டானானாலும் யாதுந் தீதின்றி யவன் வாழ்தல் வேண்டுமெனும் விழைவினால், சிறைப்புறத்தாய தலைவனை வரைதற்கு விரைவித்த துறைபற்றி,

நீத்துழைஇ வந்தவிச் செல்லன் மருண்மாலை
தூக்காது துணிந்தவித் துயரெஞ்சு கிளவியாற்
பூக்கமழ்க் கானலிற் பொய்ச்சூள் பொறுக்கென்று
மாக்கடற் றெய்வநின் மலரடி வணங்குதும்.

[நெருப்பைப் பரப்பிவந்த இந்தத் துன்பமுடைய மருள் மாலைப்போது, என்னைப் பெரிதும் வருத்துமே என்பது கருதாது, இனிமைதரும் நல்ல மொழிகளால் இந்தப் பூமணம் கமழ்கின்ற கடற்கரைச் சோலையிலே, 'என்னைவிட்டு ஒருநாளும் பிரியேன்'என்று பொய்ச் சபதம் செய்ததற்காக அவருக்கு ஒருதீங்கும் நேராமல் நீ பொறுத்துக்கொள்ள வேண்டுமென்று, சாக்ஷியாயிருந்த கடல் தெய்வமே, உன் மலரடிகளை வணங்குகின்றேன்]

எனப் பாவினளென்றால், அருங்குல மாதர் ஆயிரம் பேர் இவ்வாடன்மகளிற் கீடுதா னவாரோ!

காதன் மாதவி முற்றிற்று.

# கம்ப ராமாயணம்

## பாலகாண்டம்

### 22. பரசுராமப் படலம்.

நீதியால் நிருபரும் வேதிய ராவதோர் நீர்மை.

திருமணம் முடிந்த மறுநாளே வான்மீகி, மணமக்களோடு தயரதனை அயோதிக்கு வழிப்படுத்தினாரேனும் கம்பர், நானாவித முறைபோகங்களை இவர் சிறிதுகாலம் மிதிலையிலேயே இருந்து நுகரவைத்துப் பிறகு புறப்படச் செய்கின்றார்.

979வது பக்கத் தொடர்ச்சி.

எனினும், தனது உடன்பிறந்தாள் பேரனாகிய பரசுராமன் வந்து புரிகின்ற பெருமிதச் செயலிற்கும் அவனுற்ற பரிபவத்திற்கும் கோசிகன் கரியாயிருந்து காணாவண்ணம் முதலில் அம்முனிவனை வடதிசை போக்கிய பின்னரே தயரதனை எழும்படி செய்வதில் இவ்விரு பெரும்புலவரும் இணங்கக் காண்கின்றோம். பரசுராமன் இழுக்கம் உறுவதன்முன், தயரதனும் அவன் பாதத்தில் விழுந்து "சிறுமானிடராகிய அடியேங்களை முனியேல்" என உயி ரிரந்தவாற்றால் தன் மானத்தை யுகுத்துநின்றானாதலின் இதனைக் கண்டு வாளவிருத்தல் வசிட்டனுக்குப் பெருமையாகாதெனக் கம்பர் அம்முனிவனையும் இந்நிகழ்ச்சியிலூடாட விட்டிலர். வசிட்டனும் உடன்போந்திருத்தல் வேண்டுமென்ப துண்மையே; எனினும் கலையினதுணர்ச்சியால் தேர்ந்து அதனைச் செப்பாது விட்டனர் கம்பர். உள்ளதை உள்ளவாறே வான்மீகி உரைத்துவிட்டார்.

நாடகமுறைக் கொக்க இப்பரசுராமன் வருகையும், முன் தாடகையின் வருகையை நிகர்க்கும். சழக்கியின் சரிதத்தை யுரைத்துவந்த விச்வாமித்திரனை, "எங்குறைவது இத்தொழில் இயற்றுபவள்" என இராமன் வினவுதன் முன்னே அவள் 'மைவரை நெருப்பெரிய வந்ததென வந்தா' ளெனின், இங்கு நெறிக்கண் நேர்ந்த சகுனத்தின் பலன் யாதென வினவிய மன்னற்குப் புள்ளின் குறிகொள்ளும் நினைவாளன், "இன்றேவரும் இடையுறு அது நன்றாய்விடும்"

என்னும்மள வினில்வானக மிருள்கீறிட வொளியாய்
மின்னும்படி புடைவீசிய சடையான்மழு வுடையான்
பொன்னின்மலை வருகின்றது போல்வானனல்கால்வான்
உன்னுந்தழல் விழியானுரு மதிர்கின்றதொ ருரையான்.

ஊழிக்கடை முடிவில்திரியும் உருத்திர மூர்த்தியை ஒப்பவந்து, இராமனுக்கெதிர் சென்று,

இற்றோடிய சிலையின்திற மறிவென்இனி யானுன்
பொற்றோள்வலி நிலைசோதனை புரிவான்நசை உடையேன்
செற்றோடிய திரள்தோளுறு தினவுஞ்சிறி துடையேன்
மற்றோர்பொரு ளிலையிங்கிதென் வரவென்றன னூரவோன்.

இருபத்தொருபடிகால் நிருபர்க்கொரு பழிபற்றிட கருவற்றிட மழுவாள்கொடு களைகட்டுயிர் கவர்வான் இவ்வாறு தனதரு மிளமைந்தனை அறைகூவுங்கால், கற்றாண்போல் பிளந்திறுவதன்றிப் பற்றலனுக் கடிபணிந்து,

"புவனம்முழு வதும்வென்றொரு முனிவற்கருள் புரிவாய்
சிவனும்மய னரியும்மலர் சிறுமானிடர் பொருளோ
இவனும்மென துயிரும்முன தபயம்மினி யென்றான்"

எனின் இவனிலை பெரிதும் பரிதற்குரியதே. முன் "பனிநீர்க் கங்கை புடையூற்றுஞ் சடையானும் நான்முகனும்புரந்தரனும்புகுந்துசெய்யும் இடையூற்றிற்கு இடையூறா யான்காப்பன், பெருவேள்விக்கு எழுக" என்று விச்வாமித்திரனிடம் தன் மேம்பாடுரைத்தவனும் இவனே என்பதையும் நினைக்குங்கால், தன் புத்திரன்பால் வைத்ததோர் தனிப்பெரும் வாஞ்சையே இவன் மரபிற்குரிய மறம் அறம் இரண்டையும் வாரிங்கொண்டதென்பதை யுணர்த லருமையன்று. தன் மரபிற் கொவ்வா வன்மம்பூண்ட அவ்வந்தணனும் இம்முதியோன் உரைக்கு முகங்கொடாது இராமனையே நோக்கித் தன் கையிருந்த வில்லின் உயர்வு தோன்ற அதன் வரலாறு கூறி,

உலகெலா முனிவற் கீந்தேன்
உறுபகை யொடுக்கிப் போந்தேன்
அலகின்மா தவங்கள் செய்தோர்
அருவரை யிருந்தேன் ஆண்டைச்
சிலையைநீ யிறுத்த வோசை
செவியுறச் சீறி வந்தேன்
மலைகுவன் வல்லை யாயின்
வாங்குதி தனுவை யென்றான்,

இதுகேட்ட தந்தை மூர்ச்சனையுற்று வீழ, இராமனோ, வான்மீகத்தில் காண்பதுபோல் யாதும் எதிருரைத்திலன். தாடகைக்கு முன் இருந்ததோர் அமைதிபோலும், 'நளிர்முடி நீ சூடல்வேண்டும்' எனத்தயரதன் அரசை நல்கியபோது விருப்பும்வெறுப்பும் இன்றி நின்றதேபோலும், மற்றுக் கானகமே அளித்த கைகயியின்முன் அன்றலர்ந்த செந்தாமரையை வென்ற முகத்தோ டிருந்ததுபோலும், கூனி கூன்நிமிர உண்டையில் அடித்தவாறுபோல் சினவுண்மை தோற்றாது இராவணனோடு பொருததே போலவும், யாதும் எத்திறத்திலுஞ் சலியாது, நன்றொளிர் முகத்திலோர் முறுவலே யெய்தி, நீட்டிய சிலையைத்தன் நெடுங் கரங்களில் ஏந்தித் தோளுறவாங்கி,

பூதலத் தரசை யெல்லாம் பொன்றுவித்தனை யென்றாலும்
வேதவித் தாய மேலோன் மைந்தன்நீ விரதம் பூண்டாய்
ஆதலிற் கொல்ல லாகா தம்பிது பிழைப்ப தன்றால்
யாதிதற் கிலக்க மாவ தியம்புதி விரைவி லென்றான்.

பரசுராமனுந் தன்னிரு கரங்கள் கூப்பி,

நீதியாய் முனிந்திடல் நீயிங்கு யாவர்க்கும்
ஆதியா னறிந்தனன் அலங்கல் நேமியாய்
வேதியா இறுவதே யன்றி வெண்மதிப்
பாதியான் பிடித்தவில் பற்றப் போதுமோ

எனத் துதிக்கலாயினன். 'வேதியா,' என்னுமிது 'இரண்டாகி' என்னும் பொருளோ டிங்கு இணங்கு மெனினும், இராமனைப் பரசுராமன் 'அந்தணனே' என வழைத்தான் எனக் கொள்ளினும் அமையும். இம்மொழி இப்பொருளோடு பிரதிதொனிப்பதை ஆறாயிரம் செய்யுள்களுக் கப்பால், களத்தினில் தோற்றுவீழ்ந்த கும்பகருணன் இவ்விராமனை,

நீதியால் வந்ததொரு நெடுந்தரும நெறியல்லால்
சாதியால் வந்தசிறு நெறியறியா னென்தம்பி
யாதியா யுனையடைந்தா னரச னுருக்கோண்டமைந்த
வேதியா இன்னமுனக்கடைக்கலம்யான்வேண்டினேன்

என அழைக்கும் செவ்வியைக் காரணத்தோடு கேட்கலாவோம்.

தவமெலாம் இராமன்கை வாளிக் கிரையாக்கி யகன்றனன் பரசுராமன். தயரதன் மீண்டோர் பிறவி தானும் எடுத்துத் தன்மைந்தனும் எடுத்திருக்கக் கண்டானென மூர்ச்சை தெளிந்தெழுந்து

பரிவறு சிந்தையப் பரசு ராமன்கை
வரிசிலை வாங்கியோர் வசையை நல்கிய
ஒருவனைத் தழுவிநின் றுச்சி மோந்துதன்
அருவியங் கண்ணெனும் கலச மாட்டினன்.

இன்னதன்பின் அனைவரும் அயோத்திமாநகர் இனிது வந்தெய்தினர். குலப்பகையாய இப்பரசுராமனைத் தொலைத்தவன் தன் மைந்தன் என்பதே தயரதன் மகிழ்விற்கும் நினைவிற்கும் முதற்படி என்றும் நின்றது. பின்வருங் காண்டத்தின்முதலில், "பூண்ட போர் மழுவுடையவன் நெடும்புகழ் குறுக நீண்ட தோள் ஐய" எனத் தன் மைந்தனை அழைத்து "இவ் வரசின் பாரம், நீ ஏற்கவேண்டு"மென்று கூறுவான். இராமனது மேன்மையை வசிட்டனது சொற்களால் கேட்டபோது, 'எறிமழுவாளவன் இழுக்கம் உற்ற அன்றினும்' பெரியதோர் உவகையன் ஆவான். பிறகு "வடிமழுவாளவற் கடந்தமைந்தற்கு, முடிபுனை கடிகைநாள் மொழிமின்" என்று கணிதமாக்களை விதிப்பான். ஆயினும் மூவரில் முதல்வனை முழுமுதற்பொருள் இராமனுக்கு இஃதோர் பொருளாமோ! காதன் மைந்தர் புரியும் சிறு செயலெல்லாம் பேதைத் தந்தையர்க்குப் பெரியதாய்த் தோன்றி நிற்கும்.

பாலகாண்டம் முற்றிற்று.

---

# வில்லி பாரத விளக்கம்

## சபா பருவம்.

### சூதுபோர்ச் சருக்கம்

தனது பிள்ளைகளது கொடிய சூழ்ச்சிகளுக் குட்பட்ட திருதராட்டிரன், சகுனியை முதலிற் புகழ்ந்ததோ டமையாமல், விதுரனையுந் தூதனுய்ச் செல்ல ஏவினன். நீதி நெறியைக் கடைபிடித் தொழுகு மானிடனுயின், அச்சமயம் தனது தம்பியை இத்தொழிலுக் குட்படுத்த முயன்றிரான். முன்னரே யிவ்விதுரன் வஞ்சச் சூதைக் கடிந்து கூறியிருக்க, அவ்விரகு கைகூடும் வண்ணம், அதில் மனது செலுத்தாத ஒருவனைத் தூதனுய் அனுப்புவது அரக்கத் தன்மையோ டொப்பாகும். தனது தம்பி தன்னுட னுண்டு தனக்குக் கடமைப் பட்டிருந்ததால், அவனைச் சுதந்தரமில்லா வடிமையென வெண்ணி, அவனது மனப்பான்மையையும் உணர்ச்சியையும் அடிப்படுத்தி அவனுக்கிஷ்டமில்லா வேலையைச் செய்யச் சொன்னது, ஏவியோனது அற்பத் தன்மையை வெளிப்படுத்திற்று.

967வது பக்கத் தொடர்ச்சி.

விழியிலா வென்றி வேந்தன்
விதுரனை யழைத்து நீபோய்
மொழியிலா ருலகின் மற்றுன்
மொழியினை மறுக்க வல்லார்
பழியிலா விசைகொ ணீதிப்
பாண்டவர் வந்துன் மைந்தர்
வழியிலா யொழுகும் வண்ணம்
மருட்டிநீ கொணர்தி யென்றான்.

[கண்ணில்லாத வெற்றியையுடைய திருதராட்டிரன், விதுரனை யழைத்து நீபோய்ச் சொன்னால் உலகத்தில் உன் வார்த்தையைத் தடுக்கக் கூடியவர் யாரிருக்கிறார்கள்? பழியில்லாத புகழையும் நீதிநெறியையும் உடைய பாண்டவர்கள் வந்து, உன் பிள்ளைகளாகிய துரியோதனன் முதலோருடைய வழியில் நடந்துகொள்ளும்படி பாண்டவர்களை மயக்கி அவர்களை இங்கே கொண்டு வருவாயாக, என்றான்]

தனது புதல்வனை எதிர்த்துப் பேசியவனை, மைந்தன் சொன்னதையே செய்யச் சொல்லல், பிள்ளைக்கு ஒருவித ஏற்றத்தைத்தந்து அவனை மகிழ்வித்ததாகும். ஆகவே 'விழியிலா' வேந்தன், பொறியை யிழந்ததுமன்றி தனது நல்லறிவையும் உடனிழந்து நின்றான். தகாது சொன்னானுக்கு விழியொடு அறிவு மில்லையெனக் கவி தன் கருத்துத்தோன்ற அடைமொழியையுந் தந்துள்ளார். விழியும் நல்லறிவு மில்லாத வேந்தனுக்கு வெற்றி யெங்ஙன முண்டாயிற்றென்னில், தான் நினைத்த காரியங்களைச் செவ்வனே செய்து தனக்கு வெற்றியை யுண்டாக்கத்தக்க விதுரன் முதலிய சதுரர் அவனிடமிருந்ததாற்றான் என்க.

உலகில் புகழ்ச்சிக்கு ஈடு படாதவரில்லை. கைக்கூலி வாங்காது நெறியுடன் தமது வேலையை நடாத்து முயர்நடையோரும், புகழ்ச்சிக்கு மகிழ்ந்து இரந்தோர் வேண்டியதை வேண்டியாங்கு செய்கின்றனர். ஆங்கில ஆசிரியரொருவ ரிதனைக் காட்டவந்த விடத்தில், அன்னார் கைக்கூலி வாங்குபவரைவிட, பணம் பெறுததால் சற்றுவறிஞரே யன்றி, மனிதர் எண்ணிக் கையிலுயர்ந்தோராகார் என்கின்றார். முற்றுணர்ந்தும் தாமவர் தன்மை யுணராராய், இன்னவழியில் தன்னிடம்அவரதுகாரியம்கைகூடப்பெறலா மென்றெண்ணி வந்தவர்க்கு அஃதவ்வாறே கைகூடச் செய்துவிடுவது புலமையின்பாற்நன்றென்பது அவருடைய கொள்கை. இங்கு, சாதாரண மனித னொருவன் பிறருடைய சமயோசிதப் பேச்சால் மகிழ்ந்துவிடுதல்போல், திருதராட்டிரனது வெளிப்படையான புகழ்ச்சியால் விதுரனும் மகிழ்ந் தக் காரியத்திற் குடன்பட்டது மிகவும் எளிமைத்தாகும். சினங்கொண்டுசென்ற தம்பியைத் தணிவிப்ப திவ்வழியே யென்று அண்ணனும் அறிந்திருந்தனன். இன்னும் இப்புகழ்ச்சியின் குறிப்பிற்றோன்றுவதொன்றுண்டு. நீ மொழிவல்லாயெனவே, அங்ஙனம்மொழிவதற்குஏற்றவனுதற்கு நீ பலகற்றுள்ளாயாதலின் நின்னைச் சொல்வன்மை யுடையாயென்று சொன்னேன் என்று மறைவில் அவனது கல்வியையும்



சிறப்பித்துக் கூறியவனுகும். அற்றேல் திருதராட்டிரன் முன்னறு வில்லானெனச் சொல்லி யிங்கு அறிவுடையோனுய்ச் சொல்வ தெவ்வாறெனில், இஃதறிவுடைமையன்று. ஆங்கிலத்தில் (Low cunning) என்று சொல்லப்படுகின்ற ஒருவித வஞ்சத் தன்மையாகும். பாண்டவரை நீதி யுடையோரென்றதனுல் விதுரனது மனங்குளிரச்சினங்கொண்டிருந்த காலத்தும் இளையோனுன துரியோதனனை அன்பால் 'ஐய நின் தந்தை ஓலை ஐவருக் கெழுதி விட்டால்' என்று, ஐய அன்பிற்குரியவனே, என்று சொல்லியுள்ளா னுதலாலும், 'யானுமத் தந்தை யன்றோ' என்று விதுரனே மொழிந்துள்ளா னுதலாலும், 'உன் மைந்தர்' என்றான் திருதராட்டிரனும் மேலும், அவர் உன் மைந்தராதலால், உன்மத்தரா யெண்ணி யவர் சொன்னவை யனைத்தும் மனத்துட் கொள்ளேல் என்று இரந்தபடி யாயிற்று. இவர் வழியிலாகிச் சிக்கும்படி அவரை யுன் சொல்வன்மைகொண்டு வெருட்டி மயக்கிக்கொணர்தி, யென்று தனது தம்பியினது நற்குணங்களை யறியாதவன் மொழிந்தான். இதனுல் மானிட இயற்கையைப்பற்றி அவன் கொண்டிருந்த தாழ்ந்த வெண்ணம் வெளியாகிறது. இவ்வாறு சொல்லின் தன் தம்பிதான் தன்னைப்பற்றி யென்ன வெண்ணங் கொள்வானென்று சற்று மோர்ந்திலனந்தகன். அங்ஙன மறிந்தானுயினும் தன் காரியமே பெரிதென் றெண்ணினன் போலும். ஓரளவு வயதெல்லையைத் தாண்டியபின், தம்மைப்பற்றியும், தமது அறிவைப்பற்றியும் பிறரென்ன நினைவாரென்றெண்ணுவதை மனிதர் மறந்து விடுகின்றனர். நினைப்பினும், உணர்ச்சியின் கூர்மை மழுங்கி விடுவதால், அதையொரு பொருட்படுத்துவதில்லை.

தம்பியர் விழைவாற்கூடஞ் சமைத்தபே ரழகுகாண
விம்பர்வந்தெமையுமெய்தி யேகுகவிரைவினென்னப்
பைம்பொனி னோலை மீது பண்புற வெழுதி யின்னே
யெம்பியு மேகு கென்றா னேவலி னவனும் போனான்.

[உன்தம்பிமார் ஆகிய துரியோதனன் முதலோர் அன்புடனேகட்டிய மண்டபத்தின் சிறந்த அழகைக்காண விரைவில் இங்கே வந்து எம்மையும் கண்டுகொண்டு போவாயாக என்று, பொன்னாற் செய்த ஓலையில் அழகாக எழுதி இப்போதே தம்பியாகிய நீயும் செல்லக்கடவா யென்றான்; அவனது கட்டளையால் தம்பியும் போனான்.]

'உனதுதம்பியர் உனக்கும் காட்டவேண்டு மென்கிற அவாவோடு மண்டபங் கட்டினாராதலால் அதனைக் காண வருதலிற் றவறாய் என்று யானறிவேன்; அன்றியும் அது சாமான்ய மண்டபமன்று; அது பேரழகுடையது; வந்துதான் பாராய்' என்று சிலந்தி தன் கூட்டழகைக் காண ஈயை யழைத்ததுபோ லழைத்தான் திருதராட்டிரனும். தேளுக்குவிடம் வாலிலென்பதுபோலிவ் வோலையிலும் விடம் கடைசியிலுள்ளது. ஒருசமயம் 'மண்டபமெங்குச்செல்கின்றது? பின்னர்ப் பார்த்துக்கொள்வோ'மென்றெண்ணியேனும், வெளிப்படையாய்த் தோன்றாது மறைவா யேதோ வுள்ள தென்று ஐயங்கொண்டேனும், அன்றி, விதுரன் மெய்போலெண்ணத்தக்க பொய்களை வினவில்சொல்லாது மயங்கி மருண்டு வார்த்தை சொல்லினு மதன்மூலமேதோ வஞ்சனையுண்டென் றவர் சந்தேகித்தேனும் வராது நின்று விடுவரோ வென்கிற அச்சத்தால் 'எம்மைக்காண வருதி' யென்று ஓலையிற் சேர்த்தெழுதினன். 'பழியிலா இசைகொள் நீதிப் பாண்டவ' ரானமையி னவர்தந்தை சொற்றவாரென்று திருதராட்டிரனுக்குத் தெரியும். ஆகவே இவர்களது நற்குணத்தையே யவர்களுக்கு வலையாய் வீசினன். மண்டபங் காண 'வாராவிட்டாலும், வயதான என்னை யொருமுறை கண்டு செல்லுங்கள், என்று இரந்த முகத்தால் கரந்த கட்டளை யதனிறுதியில் வரையப்பட்டது.

கவறாடலைப் பற்றிய பேச்சே கூடாதென்று கனன்றுரைத்த விதுரன், பாண்டவர்களை யதிற் சிக்கவைக்கும்படி யவர்களைக் கொணர்தற்கு எங்ஙனம் உடன்பட்டான்? என்றெழும் வினவிற்கு விடை யிறுத்து நின்றது கடையடியும். தமையனேவ யதை மறுக்க மாட்டானு யவனும் சென்றான். தகப்ப னில்வழி தமையனே யதிகாரத்தை வகித்து நிற்பதா லக்காலத்திய வழக்கப்படி அண்ணன் வார்த்தையைத் தட்டாமற் செய்யக் கடமைப்பட்டிருந்தான் தம்பியும். மேலும், இவனில்லையேல் கூலிக்கோ, வேலைக்கோ, யன்றி யொரு புன்முறுவலை யடைதற்கோ, அரசற்கு உகந்தவனென்னு மொழியால் வியாபாரஞ் செய்தற்கோ, அரசன் கட்டளைய நிறைவேற்றி வைத்தற்குச் சித்தமாயிருந்தவ ரெண்ணிலர். எவ்வழியிலாயினும் அரசவாணை நிறைவேறிவிடுமாதலால், தானே சென்று உண்மையை விளம்பி யவர்களை மருட்டாமல் தெருட்டலாமென்று உட்கொண்டு சென்றனன் விதுரனும். வரப்போவ தின்னதென ஒருவர் முன்னுணர்ந்தின், அதுவே அவற்கு வெட்டைத் தடுக்கத் தந்த வோர் கேடயத்திற் கொப்பாகும். அதனுல் தருமனும் பின் வரும் கேட்டினின்றும் மீளப் போதிய வுணர்வை யடைந்தவனுவன் என்றுகொண்டு இந்திரப்பிரத்தத்தை நோக்கி வழிக்கொண்டான் விதுரனும்.

காரெனக் களிறு சுற்றக் காற்றெனப் புரவி யீண்டத்
தேரினுக் கொருவன் றன்னைச் சிலம்பெனத் தேர்[கள் சூழ
வீரரிற் பலரும் போற்ற விதுரனு மிரண்டு நாளாற்
பாரினுக் குயிரேபோலும் பாண்டவர் நகரிசேர்ந்தான்.

[மேகம்போல் யானை சூழ்ந்துவரவும், காற்றைப்போல் குதிரை நெருங்கவும், தேர்மீதேறிப் போர்புரிவதில் சிறந்த விதுரனை மலையெனத் தேர்கள் சூழவும், காலாட் படைவீரரில்பலரும் துதிக்கவும், அவனும் இரண்டுநாளில் உலகத்தாருக்கு உயிர்போன்ற பாண்டவர்களுடைய நகரத்தைச் சேர்ந்தான்.]

மன்னனது தூதனுய்ச்சென்றவனுக்கு யானைகுதிரை தேர் காலாட்களாகிய படைகள் துணையாய்ச் சென்றன. கருநிறமும், பெரியவுருவமும், மதப்பெருக்குமுடைய களிறு, பிளிறி முழங்கு மோசை கொண்டு மேகத்தோ டொப்பாயிற்று. அது போர்செய்வோரைச் சுமப்பதுடன், போர் செய்யவும் வல்லதாதலால் அதனை அணிவகுப்பில் முதன்மைப்பட வைப்பது மரபு. குதிரையு மவ்வாறே இரண்டாவதாக வைக்கப்படும். அஃதிழுத்துச் செல்லும் தேரும், புடைசூழ்ந்த காலாட்களும் வரிசைப்பட வகுத்துரைக்கப் பட்டனர். சேனைகள் போர்புரியத் தான் சேய்மைக்கண்ணின்றுவிட்டுப் பின் வெற்றிபெற்றபின் வாகை சூடியுலவும் மன்னர்போலன்றித் தானே தளகர்த்தனுய்ப் போர்முனையில் நின்று போர்புரிந்து தன் வீரருக்கு உற்சாகத்தை யூட்டுபவனுதலால் அவனை வீரரனைவரும் புகழ்ந்து புடைசூழ்ந்தனர். பாரினுக்குயிராய் நின்ற பாண்டவர், பாரினு ளொருவனுன விதுரனுக்குமுயிராயின ரென்பது வெளிப்படை. அதனுல் உயிரினைப் பிரிந்திருந்து வெற்றுடம்பு அதனை நாடியடையப் பேரவாக்கொண்டு இந்திரப்பிரத்தஞ் சேர்ந்தது. அன்றியும் அனைவர்க்கு முயிர்போன்ற பாண்டவரைக்காண விதுரன் செல்லுங்கால், பாரிலுள்ளோரனைவரது மனதையு முடன்கொண்டு சென்றான். புறப்பட்ட வஞ்ஞான்றே இவனதுயிர் பாண்டவர்களிடம் சென்று தங்கவும், பின்னுல் தான் மெல்ல இரண்டு நாளாய் நடந்து இந்திரப்பிரத்தத்தைச் சேர்ந்தான். * உலகத்தார்க்குப் பின்வரும் நன்மைகளெல்லாம் ஈடேறக் காரணமாய் நிற்பவர் பாண்டவரே யாதலால், அவருக்குப் பாண்டவர் உயிர்போ லிருந்தனர். நிலஉலகத்தி னுயிர்போன்ற நகர் பாண்டவர் நகர்; அந்நகரைச் சேர்ந்தான் பெறலரிய குணமுடைய விதுரன்.

---

* நாளால் என்னு முருபுமயக்கம விதுரனது மனமயக்கத்தைக் காட்டிற்று. பாண்டவரைக் காண அவாவின் றும், தான் மேற்கொண்ட வேலை தன் மனதிற் கொன்றுததால், பெருஞ்சுமைபோ லது தன் மனதை யழுத்த, விசைகொண்டு நடந்தும் இயலாது, விரைவில் முடியக் கூடிய பயணம் இரண்டு நாளாய் நடந்து முடிந்தது.

# 1929 வருஷத்திய வால்யூம் 2 அட்டவணை.

(ஜூலை முதல்—டிசம்பர் வரையில்)


## தலையங்கம்.

இதழ் — பக்கம்

26 கல்சரின் அவசியம் I ... ... 501
27 ,, ,, II .... ... 521
28 ,, ,, III ... ... 541
29 ,, ,, IV ... .... 561
30 கல்சரும் கவிதையும் I .... ... 581
31 ,, ,, II ... ... 601
32 ,, ,, III ... .... 621
33 ,, ,, IV ... .... 641
34 ,, ,, V ... ... 661
35 ,, ,, VI ... ... 681
36 சுய கல்சர் I ... ... 701
37 ,, ,, II ... .... 721
38 ,, ,, III ... .... 741
39 ,, ,, IV ... ... 761
40 ,, ,, V ... ... 781
41 ,, ,, VI ... ... 801
42 கல்சரை அடையும் வகை I ... 821
43 ,, ,, ,, II ... 841
44 ,, ,, ,, III ... 861
45 ,, ,, ,, IV ... 881
46 ,, ,, ,, V ... 901
47 ,, ,, ,, VI ... 821
48 ,, ,, ,, VII ... 941
49 ,, ,, ,, VIII ... 961
50 கலாநிலயம் ... 981

## கம்பராமாயணம், பாலகாண்டம்.

வரைக்காட்சிப் படலம்.
26 உணர்வாருய்ந்தார் நுகர்பவர்நைந்தார்... 508
27 கலைமதி தவழு மலையின தழகு ... 535
28 உண்பதுவு முறங்குவதுவு மூனினதூனம் 555
29 கலைதெறி புலவர் குறள்முறை கற்றூர் ... 574
30 சேக்கிழார் மொழியையு நோக்குத னன்று 592
31 சிறியோர்க் கஞ்சுதல் சிறப்புடைத்தாமோ 613
32 தீயோ ரன்றேல் தியன செய்யார். ... 635

பூக்கொய் படலம்.
33 கொம்பரே கூச வேண்டா நம்பியும் பணிவு செய்வான் ... 652
34 துனிவரப் பேதை பூண்டா ரணைவுறாங் துணிவு காண்மின் ... 675
35 வெள்கிய வாண்மையை வெஃகினர் சிலர் 694
36 ஈரிடத்து மெற்றுண்ட செந்தாமரைகளே 713

உண்டாட்டுப் படலம்.
37 இயற்கையுங் குறிப்பினு ளியங்கிய சித்திரம் 732
38 மரபினல் மாந்தர் மதுவும் மாந்துவர் ... 755
39 கற்று முற்றிய பேதைய ரிலக்கணங் கண்டோம் ... ... ... 771
40 நெஞ்சத்தின் வஞ்சத்தால் நேர்ந்ததோர் நிலைமை ... ... ... 792

எதிர்கோள் படலம்.
41 அகப்பையொன்றும் கம்பர்கை கண்டிலம் 815

உலாவியற்படலம்.
42 இராமனைக் காண வீழும் மாதரார் திறந்தா னென்னே ... 833
43 நிறையுமுண்டோ விறைவனுக் கெதிரே 854
44 தெய்வத் தையமு மார்த்தியு மெய்தினர் செய்தி ... ... ... 871
45 கண்ண னிலக்கணம் யாதென வியம்புவார் கம்பர் ... ... ... 895
46 புந்தியும் பொறியு மெந்தைபா லுந்தா... 912

கோலங்காண் படலம்.
47 இரண்டெ னினிரண் டொன்றெனினு மஃதே ... ... ... 933

கடிமணப் படலம்.
48 மாறிய மனத்த ரானோர் மாண்பிது காண்மி னம்மா ... 956
49 தான்தொழாத் தெய்வ மில்லாத் தெய்வத்தின் தமியர் யாரே ... 978

பரசுராமப் படலம்.
50 நீதியால் நிருபரும் வேதிய ராவதோர் நீர்மை ... ... ... 995

## அப்பர்.

அப்பர் பாடல்களும் அவற்றின் சந்தர்ப்பங்களும்
26 தஞ்சைஜில்லாத் திருப்பதிகள் முதற்பகுதி 503
27 கொங்குநாட்டுத் திருப்பதிக ளாராய்ச்சி 523

அப்பர் கவித்திறம்

கவிகளின் பகுதிகளும் அப்பர் உரிமையும்.
28 ஆசுகவி .... ... ... ... 543
29 மதுரகவி ... ... ... ... 570
30 சித்திரகவி ... .... ... ... 588
31 வித்தாரகவி ... ... ... ... 609
32 ,, ... ... ... ... 623
33 ,, ... ... ... ... 643
34 ,, ... ... ... ... 663
35 ,, ... ... ... .... 683
36 ,, .... .... ... ... 703
37 ,, ... ... ... .... 723

அப்பர் தேவாரமும் காப்பிய விலக்கணமும்
38 காப்பிய விலக்கணம் .... ... 743
39 ,, ,, ... ... 763

அப்பரும் நாடகவியலும்
40 நாடகத்தமிழின் மாட்சி .... ... 783
41 நாடகக் கதை ... ... 807
42 ,, ,, ,, ... ... 823
43 கூத்து முறைகளும் அதன் பிரிவுகளும் 843
44 ,, ,, ,, ... ... 863
45 ,, ,, ,, .... ... 883
46 கூத்தின் பாத்திரங்கள், அவற்றின்தொழில் 903
47 ,, ,, ,, ... .... 923
48 ,, ,, ,, ... ... 943
49 குயிலுவக் கருவிகள், அவற்றின் தொழில் 963
50 தலைக்கோலரிவை ... .... ... 982

## வில்லிபாரத விளக்கம்.

ஆதிபர்வம்
26 காண்டவ தகனச் சருக்கம் ... .... 514
29 ,, ,, ,, .... ... 563
30 ,, ,, ,, ... ... 582
31 ,, ,, ,, ... .... 603
32 ,, ,, ,, ... ... 633

சபாபர்வம்
34 இராசசூயச் சருக்கம் .... ... 670
35 ,, ,, ... ... 688
36 ,, ,, ... .... 711
38 ,, ,, ... ... 753
39 ,, ,, ... ... 770
40 ,, ,, ... ... 788
41 ,, ,, .... ... 813
42 ,, ,, .... .... 829
43 ,, ,, ... ... 852
44 ,, ,, .... ... 866





இதழ் — பக்கம்

45 சூதுபோர்ச் சருக்கம் ... ... 837
46 ,, ,, ... .. 905
47 ,, ,, .... ... 931
48 ,, ,, ... .... 951
49 ,, ,, .... ... 966
50 ,, ,, ... ... 996

## அகப்பொருள் வரலாறு.

35 பரத்தையிற் பிரிவு ... .... 695
36 ,, ,, ... ... 716
37 ,, ,, .... .... 736
38 ,, ,, .... .... 750

## மாறன் பாப் பாவினம்

26 வஞ்சிப்பா மருட்பா .... ... 506
27 பரி பாடல் ... ... 528
28 ,, ,, ... .... 547
29 ,, ,, ... ... 570
30 ,, ,, ... ... 591
31 ,, ,, ... ... 608

## மொழிபெயர்ப்புக் கட்டுரைகள்.

26 கலைத்திறம் நுனிக்கும் கலைஞன் ... 504
27 ,, ,, ,, ... 530
28 ,, ,, ,, ... 545
29 ,, ,, ,, ... 565
32 தெய்வச் செயல் (Sir Thomas Browne) 634
33 கடமை (William Wordsworth) ... 656
40 சாஹ்றதியின் கல்விபற்றிய கருத்துக்கள் சில 791
41 அரசர் அஸர்ஹாதன் (Tolstoy) ... 810
48 எண்சாணுடம்பிற் கெவ்வளவு நிலம் ... 954
வேண்டும் (Tolstoy) ... ... 972
49 ,, ,, ,, ... ... 972
50 ,, ,, ,, ... ... 989

## அண்டபுராணம்.

36 காப்பிச் சிறப்புப் படலம் ... ... 716
37 தேயிலைச் சிறப்புப்படலம் ... ... 730
38 புகயிலைச் சிறப்புப் படலம் ... ... 752
39 வெங்காய விஜயப்படலம் ... ... 769
41 கலியுகமாந்தர் சிறப்புப்படலம் ... 806

## குலசேகரர்.

26 நடமாடுங்கோயில் ... ... 512
27 ,, ,, ... ... 533
28 ,, ,, ... ... 552
29 பேயாழ்வார் ... .... 567
30 ,, ,, ... .... 586
31 ,, ,, ... ... 606
32 ,, ,, ... ... 627
33 ,, ,, ... .... 650
34 பிறவிவேண்டுந் துறவி ... ... 667
35 ,, ,, ,, ... .... 687
36 ,, ,, ,, ... .... 705
37 ,, ,, ,, ... ... 725
38 ,, ,, ,, ... ... 745
39 ,, ,, ,, .... ... 777

## நம்மாழ்வார் வைபவம்.

40 நம்மாழ்வார் காலம்—பிறப்பு .... ... 795
41 ,, ,, ,, ,, ... ... 804
42 ,, ,, ,, ,, ... ... 828
43 ,, ,, ,, ,, ... ... 851
44 கல்வி கேள்விப் பயிற்சி ... ... 870
45 திருவிருத்த ஆராய்ச்சி .... ... 889
46 பெரிய திருவந்தாதி ... ... 910
47 திருவாய்மொழி ... ... 925
48 திருவாய் மொழி ... ... 946
49 ,, ,, (படனம்) .... 977
50 திருவாய்மொழியும் பகவத்கீதையும் ... 985

## மானத சாத்திரம்.

42 முன்னுரை ... .... 836
43 ,, ,, .... ... 846
45 நரம்புகள் .... ... 886
46 ,, ,, ... .... 914
47 ,, ,, ... ... 930
49 ,, ,, ... ... 968
50 ,, ,, .... ... 991

## மலர்வனம்.

30 களவினுட் களவு ... ... 595
33 காதன் மாதவி ... ... 655
39 ,, ,, ... .... 775
42 ,, ,, ... ... 826
44 ,, ,, ... ... 874
48 ,, ,, ... .... 959
49 ,, ,, ... ... 976
50 ,, ,, ... ... 993

## தமிழ்ப் பாடம்.

அஷ்ட பிரபந்தம்.
26 திருவேங்கட மாலை ... ... 510
27 ,, ,, ... .... 525
28 ,, ,, .... ... 550
29 ,, ,, .... ... 571
30 ,, ,, ... ... 584
31 ,, ,, .... ... 611
32 ,, ,, ... ... 630
33 ,, ,, ... ... 645
34 திருவரங்கத்து மாலை ... ... 672
35 ,, ,, ... ... 692
36 ,, ,, ... ... 708
37 ,, ,, ... ... 727
38 ,, ,, ... ... 748
39 ,, ,, ... ... 767
40 திருவரங்கத் தந்தாதி ... .... 686
41 ,, ,, ... .... 804
42 ,, ,, ... .... 831
43 ,, ,, ... ... 848
44 ,, ,, .... ... 867
45 ,, ,, ... ... 885
46 திருவரங்கக் கலம்பகம் ... ... 907
47 ,, ,, ... .... 92[illegible]
48 ,, ,, ... ... [illegible]
49 ,, ,, ... [illegible]
50 ,, ,, ... [illegible]

## பிற விஷயங்கள்.

26 பழமுதிர் சோலை—"வாழி வாகரம்"... [illegible]
27 "சிலப்பதிகாரமும் மணிமேகலையும்—" பி. இராமானுஜன் ... 527
28 ,, ,, ... ... 548
29 மதிப்புரை—"பெருமாள் திருமொழி" 576
30 சிந்தாமணி நீதிச்செய்யுள்—வி. பரமசிவன் 590
31 ,, ,, ... ... 605
32 ,, ,, ... ... 666
33 ,, ,, ... ... 648
34 ,, ,, ... ... 665
35 ,, ,, ... ... 685
திருவாய்மொழியின் திறம்—C. சுந்தரமையர் 690
36 கண்கண்ட தெய்வம்—T.N. பிச்சுமணி 706
37 உடலும் மனமும்—T. N. பிச்சுமணி 784
38 நன்னெறியின் ஏற்றம்—C. சுந்தரமையர் 754
42 மதிப்புரை—'ராஜதரங்கிணி' ... ... 839

KALANILAYAM.
REG. NO. M, 2324.

# வர்த்தமானம்

சென்னையில் வைசிராய்.--தென்னிந்தியாவிலுள்ள பிரதான நகரங்களில் சுற்றுப்பிரயாணம் செய்து விட்டு ராஜப் பிரதிநிதி தம்பரிவாரங்களுடன் சென்ற வாரம் வியாழக்கிழமை காலை 7-30-க்கு எழும்பூர் ஸ்டேஷன் வந்து சேர்ந்தார். சென்னைக் கவர்னரும், நிர்வாகசபை அங்கத்தினர்களும், மந்திரிமார்களும், மற்றுமுள்ள பிரபல இந்திய ஐரோப்பிய கனவான்களும் ராஜப் பிரதிநிதியை வரவேற்றனர். எழும்பூர் ஸ்டேஷனிலிருந்து ராஜப் பிரதிநிதி கார்ப்பொரேஷன் சென்றார். அங்கு அவருக்கோர் உபசாரப்பத்திரம் படித்துக் கொடுக்கப்பட்டது. அதற்கு வைசிராய் தந்த பதில் வருமாறு:—

"எனது தென்னாட்டுப் பிரயாணத்தில் இந்த ராஜதானியின் முக்கிய நகரங்களையும், தென்னாட்டு ஜனங்களையும் எனக்கு நேரில் பார்க்க அவகாசம் ஏற்பட்டது. சென்ற விடங்களிலெல்லாம், தமிழ்நாட்டு மக்கள் எங்களை அன்புடன் வரவேற்று உபசரித்ததற்கு நானும் எனது மனைவியும் தமிழ்நாட்டாரைப்பாராட்டுகின்றோம். கல்வித் துறையிலும் மற்றப் பலதுறைகளிலும் இம்மாகாண மக்கள் முன்னேற்ற மடைந்திருப்பதைக் காண நாங்கள் மகிழ்ச்சியடைகின்றோம். இச்சென்னையினிடம் எனக்கு விசேஷப் பற்று உண்டு. ஏனெனில் 18-வது நூற்றாண்டில் எனது குலத்தவர் ஒருவர் பிரஞ்சுக்காரருடன் போராடியதில் உயிர் துறக்க, அவரது உடலம் சென்னையில் அடக்கம் செய்யப்பட்டது.

"கார்ப்பொரேஷன் வேலையைப்பற்றி நீங்கள் உபசாரப் பத்திரத்தில் கூறியுள்ளதைக் கேட்டேன். ரயில்வேப் பிரயாணம் செய்பவர்மீது எல்லைவரி (Terminal Tax) போடுவதற்கு அரசாங்கத்தார் வசதி தந்தால் ஜனங்களின் வரிப்பளுவைக் குறைக்கலாம் என்றும் நகர சுகாதார முதலிய வேலைகளைச் செய்யலாம் என்றும் கூறியுள்ளீர்கள். 13 வருடங்களுக்கு முன் இத்தகையவரிவிஷயம் இந்தியாகவர்ன்மெண்டார் முன் வர அவர்கள் ஆலோசனை செய்து முடிவில் இவ்வரியை ஆதரிக்க மறுத்தனர். இப்பொழுது அதைப் புனராலோசனை செய்வதற்கான நிர்ப்பந்தம் ஒன்றும் ஏற்படவில்லை என்று தோன்றுகின்றது.

"உத்ஸவகாலங்களில் தற்காலசாந்தியாய்ச் சுகாதார ஏற்பாட்டின் செலவிற்காக இப்பொழுது வரி வசூலிக்கப்படுகின்றது. அதுபோன்ற சாச்வதமான வரிபோடுவது நியாயமாகாதென அரசாங்கத்தார் கருதுகின்றனர். என்னை உபசரித்ததற்கு நான் உங்களுக்கு எனது வந்தனத்தை அளிக்கின்றேன்"

பின்னர் ராஜப் பிரதிநிதி அரசாங்க விடுதி சென்றார். அங்குப் பலசங்கத்தினர் உபசாரப்பத்திரம் கொடுத்தனர். சென்னை முஸ்லீம் சங்கத்தார் படித்துக் கொடுத்த உபசாரப் பத்திரத்தில் முகமதியர்களுக்கு உத்தியோகங்களில் போதிய பிரதிநிதித்துவம் வேண்டுமெனக் கூறப்பட்டது. ராஜப்பிரதிநிதி தமது விடையில், வகுப்புப் பிரதிநிதித்துவம் நல்லமுறையன்றென்றும், திறமையின்பேரில்தான் உத்தியோகம் கொடுக்கப்படவேண்டுமென்றும் கூறினார்.

***

புதுவருட டயிரி:—சென்னைத் தமிழ்க்கலைக் கழகத்தார் (Tamil Academy) வெளியிட்ட புதுவருட டயிரி வரபெற்றோம். இந்த டயிரி சிற்றடக்கமான வடிவில் நன்கு அமைந்துளது. பஞ்சாங்கமும், தமிழர் கொண்டாடும் விருத தினங்களும், ஏகாதேசி அமாவாசை கிருத்திகை முதலிய தினங்களும் இதனில் குறிக்கப்பட்டுள்ளன. இதன் ஒவ்வோர் பக்கத்திலும் நீதிக்குறட்பாக்களும், மேனாட்டறிஞர் வாசகங்களும் அச்சிடப்பட்டுள்ளன. 4 அணா விலைக்குச் சென்னை, புரசைத் தமிழ்க்கலைக் கழகத்தாரிடம் அகப்படும்.

**1928**-ம் ஆண்டுப் பிரதிகள் பயிண்டு செய்தும் — *கலா நிலயம்* — செய்யாமலும் எம்மிடம் கிடைக்கும்

1. சேக்கிழாரும் கண்ணப்பரும்
சேக்கிழார் திறனும், அன்பினது தத்துவமும், கண்ணப்பர் பக்திச் சிறப்பும் விளக்கும். T. P. மீனாட்சிசுந்தரம் M. A. B. L.—51 கட்டுரைகள்.

2. கம்ப இராமாயணம்
பாலகாண்டம், ஆற்றுப்படலமுதல் மிதிலைக்காட்சிப் படலம் வரை—T. N. சேஷாசலம், B. A. B. L. 51 கட்டுரைகள்.

3. அகப்பொருள் வரலாறு
காட்சிமுதல், ஒதற்பிரவு வரை—K. இராமரத்னம் B. A. 18 கட்டுரைகள்.

4. [illegible]ந்திமதி
காவிய இயல்நலம் பெற்ற நற்றமிழ் நாவல். T. N சேஷாசலம் B. A. B. L. 51 இதழ்களில் வந்துளது.

5. தமிழ்ப்பாடம்
நளவெண்பா,—சுயம்வர காண்டம் கலிதொடர் காண்டம். இந்த வருடத்தில் பெரும் பகுதி அணி இலக்கணமும், சொல்லிலக்கணமும் ஓதப்பட்டுளது.

6. மேனாட்டுத் தத்துவ அறிஞர்
பிரிடரிக் நிட்ஷேன் எபிகுயூரன் ஜினோன் பைரோன் அரிஸ்டாட்டல் முதலாயினோர்—T. R. இராஜகோபால்,

7. இலக்கிய ஏற்ற ஆராய்ச்சி
E. T. சொக்கம்மாள் B. A; L. T. எழுதியது 6 கட்டுரைகள்.

8. தேவாரமும் ஐந்திணையும்
தமிழ் இலக்கண ஐந்திணைப் பாகுபாட்டைத் தேவாரத்தின் துணைகொண்டு விளக்கிய கட்டுரைகள்—E. N. தணிகாசல முதலியார் B. A. B. L. 8 கட்டுரைகள்

9. மேனாட்டறிஞர் கட்டுரை (மொழி பெயர்ப்பு)
கார்லைல், ரஸ்கின், எமர்ஸன், டால்ஸ்டாய் செஸ்டர்டன், ஆஸ்கார் ஒயில்டு, ராபர்ட் பர்ன்ஸ் முதலாயினோர்.

10. இலக்கியக் கதைகள்
புரந்தரனார் பெருந்தவம், சித்ரகூடம், அகத்தியர், சூர்ப்பனகை.—R. முத்தையர்

11. வானசாஸ்திரம்
இதன் உண்மைகளை யாவரும் தெரிந்துகொள்ளும் வண்ணம் சுருக்கமாய் எளியநடையில் சொல்லப்பட்டுளது.—20 கட்டுரைகள்.

மலர்வனம் பழமுதிர்சோலை
சிந்தாமணி, சிலப்பதிகாரம், மணிமேகலை, புறநானூறு, ஐங்குறுநூறு, முதலியவைகளினின்று எடுத்தமைத்த தனிநிலை அழகுகள்—14 கட்டுரைகள்.

காலடி நானூற்றின் திறம், சிவகாமி சரித்திர ஆராய்ச்சி, பாரசீகப்புலவர் உமார்காயம் காட்டிவைக்கும் தத்துவநிலை, முதலிய பல வியாசங்களும் வந்துள்ளன.

விலை விபரம்—தபால் செலவு உள்பட:—

| | | | |
|---|---|---|---|
| பையிண்டு செய்யாதது | உள்நாடு ரூ 8—0—0 | வெளிநாடு | ரூ 9—8—0 |
| ஆப்லெதர் கிலுடிபயிண்டு | உள்நாடு ரூ 10—0—0 | வெளிநாடு | ரூ 11—8—0 |
| காலிகோ [illegible] | உள்நாடு ரூ 9—8—0 | வெளிநாடு | ரூ 11—0—0 |

கலா[illegible] ஆபீஸ், 11, வேளாளர் தெரு, புரசைபாக்கம், சென்னை

Printed at the B. N. [illegible] Road and Published by Mr. E. Kumariah, B.A., B.L. (Editor).